நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கடலூர் மாவட்டத்தில் சிறிய இறால் பண்ணைகளுக்கு ஆட்சியர் அனுமதி**

First Published : 24 Mar 2010 12:50:45 AM IST

கடலூர், மார்ச் 23: கடலூர் மாவட்டத்தில் 34 சிறிய இறால் பண்ணைகளை நடத்த, விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் திங்கள்கிழமை அனுமதி வழங்கினார்.

÷மாவட்ட ஆட்சியர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: உவர் நீர் இறால் பண்ணைகள் நடத்த கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டப்படி, அந்த ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத இறால் பண்ணைகளில் இருந்து பிடிக்கப்படும் இறால்களை, வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியாது.

÷அதன்படி இந்த ஆணையத்தில், கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் 34 குறு இறால் பண்ணைகள் அமைக்க விவசாயிகள் பதிவு செய்ய, விண்ணப்பித்து இருந்தனர். இந்த விண்ணப்பங்களை பல்வேறு துறை அதிகாரிகள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தனர். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் விண்ணப்பித்த விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் ஆணையத்திடம் இருந்து பெறப்பட்டு உள்ளது.

÷இச்சான்றிதழ்களை திங்கள்கிழமை நடந்த மக்கள் குறைகேட்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் வழங்கினார். மீன்வளத் துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) இரா.இளம்பரிதி உடன் இருந்தார்.

**உப்பு உற்பத்தியில் ரூ.100 கோடி முதலீடு: டாடா திட்டம்**

First Published : 24 Mar 2010 12:42:18 AM IST

பெங்களூர், மார்ச் 23: உப்பு தயாரிப்புத் தொழிலில் அடுத்த 2 ஆண்டுகளில் ரூ.100கோடி முதலீடு செய்யப்படும் என டாடா கெமிக்கல் நிறுவன முதன்மை நிதித்துறைஅதிகாரி பி.கே. கோஷ் தெரிவித்துள்ளார்.

டாடா நிறுவனத் தயாரிப்பான குடிநீர் சுத்திகரிப்பு "ஸ்வச்' பில்டரை பெங்களூரில்அறிமுகப்படுத்திய அவர், இதுகுறித்து கூறியது: குஜராத் மாநிலம் மிதாபூரில் டாடா நிறுவன உப்பு தயாரிப்பு தொழிற்சாலை உள்ளது. தற்போது இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு 5.5 மில்யன் டன் உப்பு தயாரிக்கும் திறன் கொண்டதாக உள்ளது. இதை ஆண்டுக்கு 8 மில்லியன் டன்னாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அடுத்த இரு ஆண்டுகளில் ரூ.100 கோடி முதலீடு செய்யும் என்றார்.

**வயல்களில் வங்கி அதிகாரிகள் ஆய்வு**

First Published : 24 Mar 2010 08:27:38 AM IST

ஆலங்குடி, மார்ச் 23: ஆலங்குடி பகுதியில் வங்கிக் கடன் மூலம் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட வயல்களில் பாரத ஸ்டேட் வங்கி அலுவலர்கள் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆலங்குடி பகுதியில், வங்கிக் கடன் உதவியுடன் விவசாயிகள் ஏராளமானோர் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுடைய வயல்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆலங்குடி அருகேயுள்ள வடகாடு, மாங்காடு, புள்ளான்விடுதி மற்றும் அணவயல் கிராமத்தில் வங்கியின் தணிக்கைப் பிரிவு தலைமை மேலாளர் எஸ். ராமன், உதவி அலுவலர் எஸ்.ஆர். சுப்பிரமணியன் உள்ளிட்டோர் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்தஆய்வின்போது ஆலங்குடி வங்கிக் கிளை மேலாளர் கந்தசாமி, வள்ளலார் உழவர் மன்றத் தலைவர் ஆர். விடங்கன், செயலர் எஸ். செல்வராஜ், பொருளர் எல். சின்னு, துணைத் தலைவர் கா. தங்கையன் உள்ளிட்டோர் உட னிருந்தனர்.

**திருவாரூரில் இன்று விவசாயிகள் பேரணி, மாநாடு**

First Published : 24 Mar 2010 08:45:39 AM IST

திருவாரூர், மார்ச் 23: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூ. சார்பு) திருவாரூர் மாவட்ட மாநாட்டையொட்டி பேரணி மற்றும் பொதுக் கூட்டம் திருவாரூரில் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத்தின் 22-வது மாவட்ட மாநாடு செவ்வாய்க்கிழமை திருவாரூரில் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, புதன்கிழமை மாலை 4 மணிக்கு பழைய ரயில் நிலையத்திலிருந்து விவசாயிகள் பங்கேற்கும் பேரணியும், மாலை 6 மணிக்கு திருவாரூர் - நாகப்பட்டினம் புறவழிச்சாலையில் வர்த்தகர் சங்கக் கட்டடத்துக்கு எதிரேயுள்ள திடலில் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி தலைமை வகிப்பார். திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் கே. உலகநாதன் முன்னிலை வகிக்கிறார்.

மரபுசார் வேளாண்மையும், மண்ணுக்கேற்ற விதையும் என்ற தலைப்பில் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், நஞ்சில்லா உணவு என்ற தலைப்பில் திரைப்பட நடிகை ரோகிணி, வேளாண் உற்பத்தியை ஊக்கப்படுத்த கடன், மானியம், காப்பீடு, விலை என்ற தலைப்பில் சங்க பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம், பாசன, வடிகால், நீர் ஆதார மேம்பாடு என்ற தலைப்பில் பொதுப் பணித் துறை ஓய்வுபெற்ற மேற்பார்வை பொறியாளர் என். நடராஜன், வேளாண் பிரச்னைகளிலிருந்து தீர்வு என்ற தலைப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன் ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை வரவேற்புக் குழுத் தலைவர் எச். அழகிரி, செயலர் டி. தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் செய்துள்ளனர்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 24 Mar 2010 12:59:40 AM IST

கும்மிடிப்பூண்டி,மார்ச் 23 : உலக வனநாளை முன்னிட்டு கும்மிடிப்பூண்டி வன சரக அலுவலகம் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷இதையொட்டி, மாதர்பாக்கம் வனச் சரக அலுவலகத்தில் இதுகுறித்த உறுதிமொழி வனச் சரகர் ஆர்தர் ராஜா தலைமை யில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து, காடு வளர்ப்பு திட்ட கிராமமான கும்மிடிப்பூண்டி அடுத்த ஆராமணி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

÷விழாவுக்கு ஆராமணி கிராம வனக் குழுவிந் தலைவர் வெங்கடேஷ் தலைமை வகித்தார்.

ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் குமார் முன்னிலை வகித்தார்.

÷வனவர் விஜயரத்தினவேலு உள்ளிட்ட வனச் சரக ஊழியர்களும், ஆராமணி கிராமத்தை சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

**நாளை விவசாயிகள்  குறை தீர்க்கும் கூட்டம்**

First Published : 24 Mar 2010 12:58:33 AM IST

திருவள்ளூர், மார்ச் 23 : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை (மார்ச் 25) நடைபெறுகிறது.

÷மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்  ஆட்சியர் வெ. பழனிகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல் வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளை தீர்க்க உள்ளனர்.

÷எனவே, இம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் இக்கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பருப்பு விலை திடீர் உயர்வு**

First Published : 24 Mar 2010 12:46:36 AM IST

Last Updated : 24 Mar 2010 06:08:44 AM IST



சென்னை, மார்ச் 23: பருப்பு வகைகளின் விலை திடீரென உயர்ந்துள்ளது. துவரம் பருப்பு மூட்டைக்கு ரூ. 700 வரையிலும் உளுத்தம் பருப்பு, பாசி பருப்பு ஆகியன மூட்டைக்கு ரூ. 500 வரையிலும் உயர்ந்துள்ளன.

கடந்த வாரம் ரூ. 6,000 வரை விற்ற முதல் ரக துவரம் பருப்பு செவ்வாய்க்கிழமை ரூ. 700 உயர்ந்து ரூ. 6,700}க்கு விற்கப்பட்டது. ரூ. 5,200}க்கு விற்பனையான தான்சானியா துவரம் பருப்பு ரூ. 5,800}க்கும், ரூ. 4,200}க்கு விற்பனையான துருக்கி துவரம் பருப்பு ரூ. 4,500}க்கும் விற்பனையானது.

ரூ. 6,000}க்கு விற்பனையான உளுத்தம் பருப்பு மூட்டைக்கு ரூ. 400 உயர்ந்து ரூ. 6,400}க்கு விற்பனையானது. ரூ. 5,200}க்கு விற்பனையான மியான்மர் உளுத்தம் பருப்பு ரூ. 5,600}க்கு விற்கப்பட்டது.

பாசிப் பருப்பும் மூட்டைக்கு ரூ. 500 வரை உயர்ந்துள்ளது. ரூ. 8,000}க்கு விற்பனையான பாசிப்பருப்பு ரூ. 8,500}க்கும் ரூ. 7,200}க்கு விற்பனையான சீன பாசிப்பருப்பு ரூ. 7,700}க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மொத்த விலையில் பருப்பு வகைகளின் விலை திடீரென உயர்ந்தாலும், சில்லறை விலையில் மாற்றம் ஏற்படவில்லை. எனினும், இன்னும் ஓரிரு நாளில் சில்லறை விற்பனையிலும் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் துவரம் பருப்பு வரலாறு காணாத வகையில் மூட்டை ரூ. 9,500}வரை விற்பனையானது. இதேபோல் உளுத்தம் பருப்பு, பாசிப்பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளும் முறையே மூட்டை ரூ. 8,000, ரூ. 9,000}க்கு விற்கப்பட்டன. சில்லறையில் கிலோ ரூ. 100 வரை பருப்பு வகைகள் விற்கப்பட்டன.

இந்த நிலையில் மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் துவரை மற்றும் உளுந்து வழக்கத்தை விட அதிக அளவில் பயிரிடப்பட்டு விற்பனைக்கு வந்தன. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து பருப்பு வகைகளின் விலை படிப்படியாக குறைந்தன.

 பருப்பு விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது என்று மத்திய அமைச்சர் சரத்பவார் அறிவித்த நிலையில், இப்போது திடீரென உயர்ந்ததற்குப் பதுக்கல்காரர்களே காரணம் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
 ஆரம்பத்திலேயே பதுக்கலை மத்திய, மாநில அரசுகள் தடுக்கத் தவறினால் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 100}ஐ தாண்டும் என்று வியாபாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

**உலக நீர் நாள் விழா**

First Published : 24 Mar 2010 12:52:11 AM IST

புதுச்சேரி, மார்ச் 23: புதுச்சேரி நல்லவாடு அரசு நடுநிலைப் பள்ளியில் உலக நீர் நாள் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.
÷தேசிய பசுமைப் படை சார்பில் இவ் விழா நடைபெற்றது. விழாவில் பள்ளி தலைமையாசிரியர் ந.பரமசிவ ஐயர், நீரின் தேவை மற்றும் நீரை பாதுகாக்கும் முறைகள் குறித்து பேசினார்.
÷விழாவில் மரங்கள் அலங்கரிப்பு மற்றும் மரங்களை தத்துக்கொடுத்தல், 8-ம் வகுப்பு மாணவர்களை வழியனுப்புதல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.÷குடிநீர் பற்றாக்குறை, மரங்கள் பாதுகாப்பு குறித்த நாடகங்கள், குழுப்பாடல்கள், கிராமிய நடனங்கள் நடைபெற்றது. தேசிய பசுமைப்படை பொறுப்பாசிரியர் ஆர்.இளங்கீரன், ஆசிரியர்கள் கோ.இளங்கோவன், ந.ரமேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

**மேட்டூர் அணை நீர்மட்டம் 72.67 அடி**

First Published : 23 Mar 2010 06:23:40 AM IST

சேலம், மார்ச் 22: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 72.67 அடியாக இருந்தது.
 அணைக்கு விநாடிக்கு 1,158 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.
அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.
அணையின் நீர் இருப்பு 35.37 டி.எம்.சி.

**விஷத்தன்மை கொண்ட 1,250 டன் கோதுமை பறிமுதல்: சுங்கத் துறை நடவடிக்கை**

First Published : 24 Mar 2010 06:03:10 AM IST

Last Updated : 24 Mar 2010 06:08:20 AM IST



திருவொற்றியூர், மார்ச் 23:  ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,250 டன் கோதுமை விஷத்தன்மையுடன் இருந்ததால் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னையை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் துறைமுகத்திலிருந்து கோதுமை இறக்குமதி செய்தது. எம்.எஸ்.சி. பெக்கி என்ற கப்பலில் 50 கண்டெய்னர்களில் கொண்டுவரப்பட்ட 1,250 டன் கோதுமையின் மதிப்பு சுமார் ரூ.2 கோடி ஆகும். தற்போது சென்னையை அடுத்த மீஞ்சூரில் உள்ள தனியார் சரக்குப் பெட்டக நிலையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கோதுமை இறக்குமதி செய்ய மத்திய பூச்சிக் கட்டுப்பாட்டுத் துறை மற்றும் மத்திய உணவு பொருள் ஆய்வு துறைகளின் ஆய்வக முடிவுகளின் அடிப்படையிலான அனுமதி தேவை. இந்த ஆய்வக முடிவுகளின்படிதான் இறக்குமதியான சரக்குகளை சுங்கத் துறையினர் விடுவிப்பது வழக்கம்.

மைசூரில் பரிசோதனை:

இதே நடைமுறையில் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையின் மாதிரிகள் எடுக்கப்பட்டன. சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள பூச்சிக் கட்டுப்பாட்டு துறை ஆய்வகத்துக்கும், மைசூரில் உள்ள மத்திய உணவுப் பொருள் ஆய்வகத்துக்கும் சுங்கத் துறையினர் கோதுமை மாதிரிளை அனுப்பினர்.

÷இதில் மைசூர் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டபோது, "கோதுமை விஷத்தன்மை வாய்ந்தது. இதை மனிதர்களோ, விலங்குகளோ சாப்பிட்டால் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாக' சோதனை முடிவில் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

÷இந்த ஆய்வக பரிசோதனை முடிவுகள் குறித்து சுங்கத் துறை புலனாய்வுப் பிரிவு (டி.ஐ.யூ.) அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினர். முடிவில் 1,250 டன் கோதுமையையும் பறிமுதல் செய்து  உத்தரவிட்டனர். மேலும் உரிய விசாரணைக்குப் பிறகு இவை அழிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

**சி.பி.ஐ. பிடியில் இறக்குமதி நிறுவனம்**

விஷத்தன்மை வாய்ந்த கோதுமை இறக்குமதி செய்யப்பட்டு அதை வெளியே கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சில தொண்டு நிறுவனங்கள் புகார் தெரிவித்து வந்தன. இந்நிலையில் மத்திய புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ.) சென்னை பிராந்திய அதிகாரிகள் இரு நாள்களுக்கு முன்பு மீஞ்சூரில் உள்ள சரக்குப் பெட்டக நிலையத்துக்கு வந்தனர். பின்னர் அங்கு கோதுமை இருந்த கண்டெய்னர்கள் சிலவற்றை முழுவதும் கீழே கொட்டி ஆய்வு நடத்தி உள்ளனர். பின்னர் மாதிரிகளையும் அவர்கள் எடுத்து சென்றுள்ளனர்.

இந்தியாவில் போதுமான அளவில் கோதுமை கையிருப்பு வைக்கப்பட்டிருப்பதாக மத்திய விவசாயம் மற்றும் உணவு அமைச்சகங்கள் தொடர்ந்து தெரிவித்து வரும் நிலையில் ஆஸ்திரேலியாவில் இருந்து விஷத்தன்மை வாய்ந்த கோதுமையை இறக்குமதி செய்வதற்கு காரணம் என்ன? மேலும் இதில் ஹவாலா பண பரிமாற்றங்கள் ஏதேனும் நடந்துள்ளனவா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கண்காணிப்பு அவசியம்**

வெளிநாடுகளில் இருந்து பருப்பு, கோதுமை, தானியங்கள் உள்ளிட்டவை அதிக அளவில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் விலங்குகளுக்காக ஒதுக்கப்படும் உணவுப் பொருள்களைக்கூட இந்தியாவுக்கு இறக்குமதி செய்து சில நிறுவனங்கள் கொள்ளை லாபம் பார்க்கின்றன. இது குறித்தும் மத்திய, மாநில அரசுகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்

**ரூ.67 கோடியில் குடிநீர் மேம்பாட்டு திட்டம்**

ஆலந்தூர்:மத்திய-மாநில அரசுகளின் சார்பில், 67 கோடி ரூபாய் செலவில் ஆலந்தூரில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டன.ஆலந்தூர் நகராட்சியில், 1.75 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இங்கு, சென்னை குடிநீர் வாரியம் மூலம் 100 லட்சம் லிட்டர் குடிநீர் வினியோகிக்கப் படுகிறது.

இது, இப்பகுதி மக்களின் குடிநீர் தேவைக்கு போதுமானதாக இல்லை. நிலத்தடி நீர் மட்டமும் அதலபாதாளத்திற்கு சென்றுவிட்டதால், கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதை சமாளிக்க மத்திய-மாநில மற்றும் ஆலந்தூர் நகராட்சி சார்பில் 67 கோடி ரூபாய் செலவில் புதிய குடிநீர் திட்டப் பணிகளுக்கு தில்லை கங்கா நகரில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இதையடுத்து, தில்லைகங்கா நகரில் 1.5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த் தேக்க தொட்டி ஒன்றும், 5.5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டப் பட்டு வருகிறது.நங்கநல்லூர் ஸ்டேட் பாங்க் காலனியில் 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த் தேக்க தொட்டி ஒன்றும், நேரு நெடுஞ்சாலையில் 5 லட்சம் லிட்டர் கொள் ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கான பணிகள் துவங்கியுள்ளன.

சாந்தி நகரில் முதல் மற்றும் 2வது தெரு, சுரேந்தர் நகரில் மூன்றாவது தெரு, நங்க நல்லூர் 32 மற்றும் 34வது தெருக்கள், ராம்நகரில் ஐந்தாவது தெருவில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி, 37 லட்சம் லிட்டர் கொள் ளளவு கொண்ட கூடுதல் மேல்நிலை குடிநீர் தொட்டிகள் ஆறு, 15 லட்சம் கொள்ளளவு கொண்ட கீழ் நிலை குடிநீர் தொட்டிகள் ஐந்து அமைக்கப்படும்.

மொத்தம் 144 கிலோ மீட்டர் தூரத்திற்கு பகிர் மான குழாய்கள் பதிக்கப் படும். இப்பணிகள் முடிவடைந்ததும், 290 லட்சம் லிட்டர் குடிநீரை தேக்கி வைக்க முடியும். நபருக்கு 135 லிட்டர் வரை குடிநீர் கிடைக்கும். இப்பணிகள் இரண்டாண்டுகளில் முடிவடையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வேம்பு வளர்த்தால் நோய் வராது பாரதியார் பல்கலை புது திட்டம்**

கோவை: பாரதியார் பல்கலையின் விலங்கியல் துறை சார்பில் பள்ளி, கல்லூரி வளாகங்களில் வேம்பு மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இது பற்றி விலங்கியல் துறை பேராசிரியர் முருகன் கூறியதாவது: பருவநிலை மாற்றத்துக்கும், உலகம் வெப்பம் அடைவதற்கும் காடுகளின் அழிப்பே முக்கிய காரணம். காடுகள் அழிவதால் மருத்துவ குணம் கொண்ட தாவரங்களும் அழிகின்றன. வேம்பு மர இலைகளில் அனைத்து விதமான நோய்களுக்கும் மருந்து உள்ளது. பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுகிறது. வேம்பின் கரைசலை தெளித்து பூச்சிகளின் வளர்ச் சியை கட்டுப்படுத்தலாம். õவரங்கள், மண் புழுக்கள், தேனீக்களுக்கு எந்தவித பாதிப்பும் வராது. வேம்பின் கரைசலை பயிரின் மீது தெளிக்கும் போது, வேம்பின் தாவர நச்சுத்தன்மையை உள்ளிழுத்து, தாவரங்களில் பூச்சிகள் தாக்காமல் பாதுகாக்கலாம். பயிர்களின் மீது பூச்சிகள் முட்டையிடவும் முடியாது. வேப்பம் புண்ணாக்கு பயிர்களுக்கு சிறந்த உரமாகவும் பயன்படுகிறது.

இவ்வளவு சிறப்புகள் நிறைந்த வேம்பு மரங்களின் எண்ணிக்கை தற்போது குறைந்து கொண்டே வருகிறது. வேம்பு மரங்களின் எண்ணிக்கையை பெருக்க, கோவை பள்ளி, கல்லூரிகளில் வேம்பு மரக்கன்றுகளை நட்டு வளர்க்க முடிவு செய்துள்ளோம். கோவை முழுவதும் வேம்பு மரங்கள் பரவும்போது பொதுமக்களை நோய்கள் தாக்காமல் காக்க முடியும். இவ்வாறு, பேராசிரியர் முருகன் கூறினார்.

**நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தேவை மழைநீர் சேகரிப்பு மைய இயக்குனர் பேச்சு**

கோவை: "நிலத்தடி நீரை பாதுகாக்க அதிக முக்கியத்துவம் தர வேண்டும்," என, சென்னை மழைநீர் சேகரிப்பு மைய இயக்குனர் சேகர் ராகவன் பேசினார். இந்திய தொழில் வர்த்தக சபை, சிறுதுளி அமைப்பு சார்பில் உலக தண்ணீர் தின கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. இந்திய தொழில் வர்த்தக சபை கோவை தலைவர் மகேந்திர ராம்தாஸ் வரவேற்றார். சிறுதுளி நிர்வாக அறங்காவலர் வனிதாமோகன் தலைமை வகித்தார். சென்னை, மழைநீர் சேகரிப்பு மைய இயக்குனர் சேகர் ராகவன் பேசியதாவது: உலகில் நிலப்பரப்பை விட, நீர் பரப்பே அதிகம். கடல்நீரில் எதுவும் செய்ய முடியாது. பூமிக்கு ஈரத்தன்மையை கொடுத்து, வறட்சி அடையாமல் காத்து வருகிறது கடல் நீர். நிலத்தடி நீர் அவசியமானது. பாதுகாக்க அதிக முக்கியத்துவம் தரவேண்டும். இந்தியாவில், குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே மழை கிடைக்கும். மழை காலங்களில் வீட்டின் மாடிகளில் இருந்து வெளியேறும் நீரை நிலத்தடிகளில் கட்டியுள்ள தொட்டிகளுக்கு திருப்பி விடலாம். மனித பயன்பாட்டுக்கு நாள்தோறும் 124 லி., தண்ணீர் தேவை. தென்மேற்கு, வடகிழக்கு பருவக்காற்றால் ஏற்படும் மழையால், தமிழகத்தில் தண்ணீர் கிடைக்கிறது. பருவகாலங்களில் ஒரே அளவாக மழை பெய்யாததால், தண்ணீர் பற் றாக்குறை ஏற்படுகிறது. அதிகமாக மழை பெய்யும்போது வெள்ளம் ஏற்படுகிறது. மழைநீரை சரியான முறையில் சேகரித்தால், வெயில் காலங் களில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை சுலபமாக தீர்க்கலாம். கிணறுகள் அதிகளவில் மூடப்பட்டு வருகின்றன. வறட்சியில் கிணறுகள் மூடப்படாமல் இருந்தால், மழை காலங்களில் கிணற்றில் சேகரிக்கப்படும் நீர் கூட அவ்வப்போது உதவும். ஏரி, குளங்கள் போன்றவற்றையும் கூட மூடி, குடியிருப்புகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் அமைக்கும் செயல் ஆபத்தானது.

மழைநீர் சேகரிப்பின் விழிப்புணர்வு நகர மக்களுக்கு இல்லை. தண்ணீரை அதிகமாக வீணாக்குகின்றனர். அதிகரித்து வரும் மக்கள் தொகையால், தண்ணீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கேற்ப தண்ணீர் சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். வெளிநாடுகளில் மழைநீரை சேகரித்து பயன்படுத்த மக்களுக்கு உரிமை இல்லை. அரசு தரும் தண்ணீரை மட்டுமே மக்கள் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. மழைநீர் சேகரிப்பு, மறுசுழற்சி முறை, நீரை அளவாக பயன்படுத்துதல் உள்ளிட்டவற்றை கடைபிடிப்பதால், தண்ணீரை சேமிக்கலாம். இவ்வாறு சேகர் ராகவன் பேசினார். இந்திய தொழில் வர்த்தக சபை கவுரவ செயலாளர் நந்தகுமார் நன்றி கூறினார்.

**பொள்ளாச்சி உழவர் சந்தையில் காய்கறி வரத்து அதிகரிப்பு: விலை வீழ்ச்சியால் மக்கள் மகிழ்ச்சி**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி உழவர் சந்தைக்கு, சுற்றுப்பகுதிகளிலிருந்து காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், விலை சரிந்துள்ளது. பொள்ளாச்சி உழவர்சந்தைக்கு, கோமங்கலம், நல்லாம்பள்ளி, சூலக்கல், கிணத்துக்கடவு, சுப்பேக்கவுண்டன்புதூர் உட்பட சுற்றுப்பகுதிகளிலிருந்து நாட்டு காய்கறி வரத்தும், நீலகிரி, மேட்டுபாளையம் பகுதியிலிருந்து இங்கிலீஷ் காய்கறி வரத்தும் உள்ளது. நாட்டு காய்கறிகள் 14டன் வரையும், இங்கிலீஷ் காய்கறி இரண்டு டன் சேர்த்து தினமும் 16டன் காய்கறி வரத்தாக உள்ளது. விடுமுறை நாட்களில், 18டன் வரத்தாக உள்ளது.

வரத்து அதிகரித்துள்ளதால், விலை சரிந்துள்ளது. உழவர் சந்தையில், ஒரு கிலோ சின்ன வெங்காயம் எட்டு ரூபாய்க்கும், பெல்லாரி வெங்காயம் 11 , தக்காளி நான்கு ரூபாய்க்கும், பச்சை மிளகாய்- 11, உருளை கிழங்கு - 14 கேரட் - 24 என்ற விலையில் விற்பனையானது. அதேபோல், நல்லாம்பள்ளி பகுதியிலிருந்து இரண்டு விவசாயிகள் மூலம் காளான் அதிகளவில் எடுத்து வரப்படுகிறது. தினமும், 30 கிலோ வரை காளான் சந்தைக்கு வரத்தாக உள்ளது. ஒரு கிலோ காளான் 20 ரூபாய் வரை விற்பனையாகிறது. சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுப்பகுதிகளை சேர்ந்த 50 விவசாயிகள் காய்கறிகளை எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர். வெளிமார்க்கெட்டை காட்டிலும், உழவர் சந்தையில் காய்கறி விலை குறைந்திருப்பதோடு, வரத்தும் அதிகரித்துள்ளதால் தினமும் இரண்டாயிரம் நுகர்வோர் சந்தைக்கு வருகின்றனர். இது குறித்து நிர்வாக அலுவலர் (பொறுப்பு) ஈஸ்வரன் கூறியதாவது: பொள்ளாச்சி சுற்றுப்பகுதி

களிலிருந்து சந்தைக்கு விவசாயிகள் காய்கறி அதிகளவில் வரத்தாக உள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. வாடிக்கையாளர் சந்தைக்கு அதிகளவில் வந்து காய்கறியை வாங்கி செல்கின்றனர். வரும் வாரங்களில், சந்தைக்கு மேலும் காய்கறி வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**சிதம்பரம், காட்டுமன்னார்கோவிலில் உளுந்து அறுவடை...துவங்கியது!: போதிய விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் பாதிப்பு**

சிதம்பரம்: காவிரி கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் உளுந்து அறுவடை துவங்கியுள்ளது. விதை கிடைக்காதது, பருவம் தவறிய மழை, தண்ணீர் தாமதம் போன்ற காரணங்களால் விளைச்சல் குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் சில ஆண்டாக பருவம் தவறிய மழை, வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இப்பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியையே முழுமையாக நம்பியுள்ள நிலையில் அந்த பருவமும் சில நேரங்களில் பொய்த்துவிடுவதும் உண்டு. அந்த நேரங்களில் சம்பா பயிரில் ஊடுபயிராக விதைக்கப்படும் உளுந்து பயிர், நெல்லில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் வருமானம் கிடைக்கிறது.

மாவட்டத்தில் 88 சதவீதம் நெற்பயிரில் ஊடுபயிராகவும் (சிதம்பரம், காட்டுமன்னார்கோவில்), இரண்டு சதவீதம் பாசன பயிராகவும் (கடலூர், பண் ருட்டி), 10 சதவீதம் மானாவாரியாகவும் (திட்டக்குடி) பயிரிடப்படுகிறது. மொத்தம் ஒரு லட்சத்து 35,000 ஏக்கரில் உளுந்து பயிரிடப்படுகிறது. அதன் மூலம் 27,170 டன் உளுந்து உற்பத்தி கிடைத்து வந்தது. உளுந்து சாகுபடி ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது துவங்கி மார்ச் இறுதியில் அறுவடை செய்யப்படும். காவிரி டெல்டா பாசனத்திற்கு ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படும் காலத்தில் உளுந்து பயிர் செய்யப்படுகிறது. ஆனால் இந்த ஆண்டு காலதாமதமாக சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்ததால் தாமதமாக நெற்பயிர் சாகுபடி துவங்கியது. அதனால் உளுந்து பயிரை உரிய பருவத்தில் பயிர் செய்ய முடியவில்லை. அத்துடன் அரசு விதை பண்ணைகள் மூலம் வழங்கப்படும் உளுந்து விதை கிடைக்கவில்லை. மேலும் நெல் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல் இயந்திரம் மூலம் அறுவடை செய்ததால் உளுந்து பயிர் அழிந்துவிடும் என்பதால் அதிகமான விவசாயிகள் உளுந்து விதைக்கவில்லை. அத்துடன் ஜனவரி மாத இறுதியில் பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்திவிடுவதால் உளுந்து பயிருக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது.

இதுபோன்ற காரணங்களால் மாவட்டத்தில் உளுந்து பயிர் சாகுபடி செய்வது ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. இந்தாண்டு உரிய காலத்தில் 70,000 ஏக்கரும், தாமதமாக 10,000 ஏக்கர் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. இவையும் பருவம் தவறி பயிரிட்டதால் போதிய விளைச்சலின்றி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். படாத பாடுபட்டு பல்வேறு சிரமங்களுக்கிடையே உளுந்து அறுவடை செய்த சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகள் தவிக்கின்றனர். பண்ருட்டி, விருத்தாசலத்தில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் உள்ளது. பண்ருட்டியில் குறைந்தபட்சம் 4300ல் இருந்து 4700 வரையும், விருத்தாசலத்தில் 4700 முதல் 4900 வரையும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் இல்லாததால் தனியார் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்று நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உளுந்து பயிர் சாகுபடி பற்றி ஆய்வு செய்ய கடந்த வாரம் சிதம்பரம் பகுதிக்கு வந்த வேளாண் உற்பத்தி ஆணையர் நந்தகிஷோர், இயக்குனர் கோசலராமன் ஆகியோரை, உழவர் மன்ற தலைவர் ரவீந்திரன் தலைமையில் விவசாய சங்க பிரதிநிதிகள் சந்தித்து, உளுந்து பயிர் பாதிப்பு குறித்தும், விவசாயிகளுக்கு உளுந்து பயிர் சாகுபடி ஆர்வத்தை பெருக்க பல்வேறு திட்டங்களை கொண்டு வரவேண்டும் என்றும், சிதம்பரத்தில் உழவர் சந்தையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். மேலும் நெற்பயிரில் விவசாயிகளுக்கு போதுமான வருமானம் கிடைக்காத நிலையில், நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் உளுந்து சாகுபடியை பெருக்க ஜனவரி 28க்கு பிறகு உளுந்து பயிருக்கு தனியாக தண்ணீர் திறந்துவிட்டு மாவட்டத்தில் ஏகபோக உளுந்து சாகுபடியை ஊக்குவிக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தேனீ வளர்ப்பு பயிற்சி துவக்கம்**

காந்திகிராமம்: காந்திகிராம பல்கலை.,யில் தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் துவக்க விழா நடந்தது. வேளாண் அறிவியல் மைய தலைமை பயிற்சி அதிகாரி கோபால் வரவேற்றார். துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்தார். எம்.பி., சித்தன் பயிற்சி முகாமை துவக்கி வைத்தார். காதி கிராம தொழில்கள் ஆணைய இயக்குநர் வாக்டே உட்பட பலர் பேசினர்.

**பழங்கள் வரத்து அடியோடு சரிவு: தேவை அதிகரிப்பால் விலை உயர்வு**

ஈரோடு: ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கு பழம் வரத்து குறைந்து, விற்பனை அதிகரிப்பால் பழங்கள் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. சென்ற சில வாரங்களாக ஈரோட்டில் வெயில் கொளுத்தி வருகிறது. உச்சி வெயில் நேரத்தில் அதிகபட்சமாக 97 டிகிரி வரை அடிக்கிறது. வெயிலின் தாக்கம் அதிகரிப்பு காரணமாக குளிர்பானம், ஜூஸ் ஆகியவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. ஜூஸ் தயாரிக்க பழங்கள் பயன்படுத்தப்படுவதால் பழங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. விற்பனைக்கு ஏற்ப பழங்கள் வரத்து இல்லாததால் பழங்கள் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. நேதாஜி மார்க்கெட்டுக்கு மாதுளை, ஆப்பிள், திராட்சை ஆகியவற்றின் வரத்து குறைந்துள்ளதால் கிலோவுக்கு 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. சப்போட்டா, சாத்துக்குடி ஆகிய பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால் சற்று மலிவான விலைக்கு விற்கப்படுகிறது.

ஒரு கிலோ 70 முதல் 80 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஆப்பிள் 100 முதல் 120 ரூபாய், 30 முதல் 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட திராட்சை 60 ரூபாய், 40 முதல் 50 ரூபாய்க்கு விற்கப்பட்ட மாதுளை 90 ரூபாயாக உயர்ந்துள்ளது. சப்போட்டா ஒரு கிலோ 15 ரூபாய், சாத்துக்குடி 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பழ வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு நேதாஜி பழ

மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும், பெங்களூரு மற்றும் ஆந்திராவில் இருந்து பழங்கள் கொண்டு வரப்படுகிறது. தினசரி 10 முதல் 15 லோடு பழங்கள் இறக்கப்படுகிறது. நேதாஜி மார்க்கெட்டில் இருந்து ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த சில்லரை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சென்ற மாதத்தில் பழங்கள் வரத்து நன்றாக இருந்தது. ஆப்பிள், திராட்சை, மாதுளை வரத்து அதிகளவில் இருந்ததால் விலை சற்று குறைந்து காணப்பட்டது.

சென்ற இரு வாரங்களாக ஆப்பிள், திராட்சை, மாதுளை வரத்து மிகவும் குறைந்து விட்டது. குறிப்பாக மாதுளை வரத்து அடியோடு நிற்கும் நிலையில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கொளுத்தும் வெயில் காரணமாக பழங்கள் விற்பனை நன்றாக உள்ளது. அந்தளவுக்கு பழங்கள் வரத்து இல்லை. வரத்து குறைவு காரணமாக பழங்கள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் பழங்களின் வரத்து மேலும் குறைவும் என்பதால் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். அக்னி வெயில் துவங்குவதற்கு முன்பே பழங்கள் வரத்து குறைந்துள்ளதால் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. அக்னி வெயில் நேரத்தில் பழங்கள் வரத்து சீராக இருந்தால் மட்டுமே நடுத்தர மக்கள் வாங்க முடியும். அக்னி வெயில் நேரத்தில் நடுத்தர மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மாம்பழம் சீஸன் துவங்கி விடும்.

**மண்புழு உரம் தயாரிப்பு: விவசாயிகளுக்கு பயிற்சி**

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரங்கம் இயற்கை விவசாய பண்ணையில் மண்புழு உரம் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் எம்பெருமாள் தலைமை வகித்தார். வேளாண் துணை அலுவலர் தவமணி முன்னிலை வகித்தார். பெட்காட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் மண்புழு உரம் தயாரிக்கும் எளிமையான முறை குறித்து பயிற்சி அளித்தார். மத்திய அரசின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் வேளாண் கழிவுகள், வீட்டு சமையல் கழிவுகளை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிக்க 50 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ராமதாஸ், ராமையா, யூனுஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் செந்தில், சாமிநாதன், ஜோதிகணேசன், மகேஷ் ஆகியோர் செய்திருந்தனர். வேளாண் உதவி அலுவலர் சிவகுமார் நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகை : நாகையில் வரும் 26ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. இதுகுறித்து கலெக்டர் (பொ) அண்ணாதுரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. இதில் மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், டெல்டா விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயன்பெறலாம்.

**தேயிலை விற்பனையில் லாபம்; குடிப்பவருக்கோ சோகம் 'சாயம்' செய்யும் மாயம் அதிரடி நடவடிக்கையால் மட்டுமே தொடர் பிரச்னை தீரும்**

ஊட்டி: ஊட்டியில் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்காக பெரும்பாலான டீ கடைகளில் சாயம் கலந்த தேயிலை தூள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் பல்வேறு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது. ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வாங்கும் பொருட்களில் தேயிலைக்கு முதலிடம் உண்டு. இதனை தவிர, கற்பூர தைலம், வாசனை

திரவியங்கள், பணப்பயிர்களான மிளகு, ஏலக்காய் உட்பட பிற பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர். நீலகிரியில் விளைவிக்கப்படும் தேயிலை தூள் மூலம் 'ஸ்டிராங்' டீ கிடைக்கும் என்ற நம்பிக்கை சுற்றுலா பயணிகளிடையே மேலோங்கி உள்ளதால், ஆண்டுதோறும் சுற்றுலா பயணிகள் மூலமாக மட்டும் பல கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை விற்பனை செய்யப்படுகிறது. இவர்களின் எதிர்பார்ப்புக்கு இணங்க பல தேயிலை தொழிற்சாலைகள் நல்ல தரமான தேயிலையை விற்பனை செய்து வந்தாலும், சில தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களும், இவர்களுடன் வியாபாரம் சம்பந்தம் வைத்துள்ள வியாபாரிகளும் நீலகிரி தேயிலையின் தரத்தை கெடுக்கும் வகையில், 'ஸ்டிராங்' டீயை உருவாக்க போலியான வழிகளை கையாண்டு வருகின்றனர். இதனால், தரம் குறைந்த தேயிலையை வாங்கி, சாயம் கலந்து அதிகவிலைக்கு விற்பதால் முறைகேடான வழிகளால் கோடீஸ்வர்களாக வலம் வருகின்றனர். கடந்த காலங்களில் பெரிய தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட தேயிலை லப்படம் மற்றும் சாயம் கலக்கும் முறை தேயிலை வாரியத்தின் கெடுபிடிகளால் சற்று கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், இந்த சமூக விரோத செயல் இன்றும் தொடர்கிறது. சிறு வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு இத்தகைய தேயிலை தூள் விற்பனை செய்வதால், இதனை வாங்கும் டீக்கடை உரிமையாளர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. அதேபோல, இத்தகைய டீக்கடைகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளும், உள்ளூர் மக்கள் சாயம் கலந்த தேயிலை குறித்த கேள்விகள் ஏதும் எழுப்பாத நிலையில், ஊட்டி, குன்னூரில் சாய டீ என்பது பழகிவிட்ட பானமாக மாறி விட்டது. இத்தகைய போலி சுவைக்கு வாடிக்கையாளர்களும் மாறி விட்டனர். ஈரோடு, பொள்ளாச்சி என பிற மாவட்டங்களில் உள்ள போலி தேயிலை தொழிற்சாலைகள், சாய கலப்பட குடோன்களை பிடித்து 'சீல்' வைக்கும் தேயிலை வாரிய அதிகாரிகள், நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடக்கும் சாயதேயிலை முறைகேடுகளை தடுப்பதற்கு போதிய அளவிலான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதே மக்களின் கவலையாக உள்ளது. இத்தகைய மோசடி தொழிலில் சில ஆளும் கட்சியினரின் தலையீடு இருப்பதாலும், அவர்களுக்கு 'கவனிப்பு' செல்வதாலும் இந்த பிரச்னை தொடர்கதையாக வருகிறது.எனவே, நீலகிரி மாவட்டத்தின் மக்களையும், சுற்றுலா பயணிகளையும் நோயாளிகளாக மாற்றும் சாயம் கலந்த தேயிலை தூளை உருவாக்குபவர்களை கண்டறியவும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் நீலகிரி மாவட்ட நிர்வாகமும், தேயிலை வாரியும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லையெனில், உள்ளூர் மக்களும், வெளியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளும் நோயாளிகளாக மாறுவதை யாரும் தடுக்க முடியாது.உணவு கலப்பட தடை சட்டம் பாயுமா?: கூடலூர் நுகர்வோர் மனித உரிமை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் தலைவர் சிவசுப்ரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை; நீலகிரியில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் பகுதிகளில் உள்ள மளிகை கடைகளிலும், பல தேயிலை கடைகளிலும் கலப்பட தேயிலை தூள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவை நேரடியாக தேயிலை தொழிற்சாலைகளில் கலப்படம் செய்யப்படுவதில்லை. மாறாக, பல சிறு, சிறு வணிகர்கள் மொத்தமாக தேயிலை தூளை வாங்கி அவற்றை மறைவான ஓரிடத்தில் கொண்டு வைத்து, சாயம், மரதூள் உட்பட பிறவற்றையும் கலந்து விற்பனை செய்கின்றனர். இது குடிசை தொழில் போல மாவட்டத்தில் பல இடங்களில் நடக்கிறது. பொதுமக்களும், டீக்கடைகளும் இவற்றிலுள்ள பாதிப்பை அறியாமல், அதிக நிறம் மற்றும் சுவை உள்ளதாக நம்பி வாங்கி ஏமாறுகின்றனர். மாவட்டத்தில் உள்ள அனைத்து மளிகை கடைகள், டீக்கடைகள் திடீர் ஆய்வு செய்து, கலப்பட தேயிலைதூள் விற்பவர்கள் சப்ளை செய்பவர்கள் மீது உணவு கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சிவசுப்ரமணியம் கூறியுள்ளார்

**விவசாயத்துக்கு நவீன தொழிற்நுட்பம் அவசியம் உபாசியில் நடந்த வார விழாவில் கருத்து**

குன்னூர்: 'நவீன தொழிற்நுட்பத்தை விவசாயத்தில் புகுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்,' என விவசாய வார விழாவில் வலியுறுத்தப்பட்டது. குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் நிலையம் (கே.வி.கே.,), தேயிலை வாரியம் இணைந்து குன்னூர் உபாசி அரங்கில் விவசாயிகள் வார விழாவை கொண்டாடின. 'தொழில்நுட்ப வாரம்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. உபாசி கே.வி.கே., வேளாண்மை பொறியியல் பிரிவு விஞ்ஞானி. ராமமூர்த்தி வரவேற்றார். உபாசி கே.வி.கே., திட்ட ஒருங்கிணைப்பாளரும்,

தலைவருமான டாக்டர். குமாரவடிவேலு பேசுகையில், "வளர்ந்து வரும் விவசாய தொழில்நுட்பங்களை அனைத்து விவசாயிகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகள் விழா கொண்டாடப்பட்டது.
உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தின் ஆலோசனைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும்," என்றார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற உபாசி செயலர் உல்லாஷ் மேனன், "விவசாயிகள் தரத்தை தொடர்ந்து கடைபிடித்தால் விலையை நிரந்தரமாக்கி கொள்ள முடியும். நவீன தொழில்நுட்பங்களை விவசாயத்தில் புகுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்," என்றார்.
வால்பாறை உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய ஆலோசகர் டாக்டர். முரளிதரன் பேசுகையில், "தேயிலை தொழில் குறித்து உபாசி கே.வி.கே., பல விழிப்புணர்வுகளை வழங்கியுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் அதிகளவு பயன்பெற்றுள்ளனர். சர்வதேச அளவில் நடக்கும் கோல்டன் லீப் இந்தியா விருதுக்கான போட்டியில், பல சிறு தேயிலை தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக பங்கெடுத்து, விருதுகளை தட்டி செல்கின்றன. இதன் மூலம் தென் மாநில தேயிலை தூளின் தரம் உயர்ந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் முயற்சி எடுக்க வேண்டும்," என்றார்.வால்பாறை உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர். மோகன்குமார் பேசுகையில், "விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இதுபோன்ற கருத்தரங்குகளை அடிக்கடி நடத்த வேண்டும்," என்றார்.
உபாசி கே.வி.கே., சார்பில் வெளியிடப்பட்ட சாகுபடி முறைகள் குறித்த கையேட்டை உபாசி செயலர் உல்லாஷ் மேனன் வெளியிட்டார். மண் மாதிரி ஆய்வு குறித்த கையேடை உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய ஆலோசகர் டாக்டர். முரளிதரன் வெளியிட்டார்.விவசாயிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.'விவசாயிகளுக்கு தரம் குறித்த விழிப்புணர்வு அதிகளவு ஏற்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் கத்தியை கொண்டு பசுந்தேயிலை பறிக்கப்படுகிறது. இதை தவிர்க்க வேண்டும். விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்வதில், ஒரு சில தொழிற்சாலைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே, உபாசி, அரசு சார்பில் தேயிலை தொழிற்சாலையை அமைக்க வேண்டும்,' என விவசாயிகள் சார்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது. உபாசி வேளாண் விரிவாக்க அலுவலர் டாக்டர். சண்முகம் நன்றி கூறினார்.

**வெங்காய சாகுபடி பயிற்சி**

பெரம்பலூர் :பெரம்பலூர் மாவட்ட வேளாண் துறை மூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை திட்டம்( ஆத்மா) சார்பில் மாவட்ட அளவிலான வெங்காய சாகுபடி குறித்த பயிற்சி பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி கூட்டரங்கில் நேற்று நடந்தது.பயிற்சியை மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமை வகித்து குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் நீல்ராஜ் முன்னிலை வகித்தார். வேளாண் துணை இயக்குநர் விஜயகுமார் திட்டம் குறித்து விளக்கி கூறினார்.சிறிய வெங்காய சாகுபடியில் உழவியல் தொழில்நுட்பங்கள், வெங்காய விதை உற்பத்தி,துல்லிய பண்ணையத்தில் வெங்காய சாகுபடி, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் ஆகியவை குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன், தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன தேவி, தோட்டக்கலை துணை இயக்குநர் ராபர்ட் வின்செண்ட், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி பயிர்பாதுகாப்புத்துறை தலைவர் கஜேந்திரன், பேராசிரியர் தினகரன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். முன்னதாக வெங்காய சாகுபடி குறித்த சிறு கையேட்டினை கலெக்டர் விஜயகுமார் வெளியிட்டார். பயிற்சியில் தனலட்சுமிசீனிவாசன் கல்விநிறுவன ஆலோசகர் ராமமீனாட்சி, கல்லூரி முதல்வர் அனுசா, துணை முதல்வர் முத்துமணி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் துணை இயக்குநர் செந்தமிழ்செல்வன், வேளாண் அலுவலர் பச்சியம்மாள், வேளாண் அலுவலர் பாபு மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர். முன்னதாக வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை திட்ட இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். முடிவில் துணை இயக்குநர் சிவக்குமார் நன்றிகூறினார்.

**கொளுத்தும் வெயிலால் உப்பு உற்பத்தி அமோகம்**

ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் கொளுத்தி வரும் வெயிலின் காரணமாக உப்பு உற்பத்தி அமோக நடந்து வருகிறது. கடலோர மாவட்டமான ராமநாதபுரத்தில் மீன்பிடியை தொடர்ந்து உப்பளத்தொழிலில் பலரும் ஈடுபட்டுள்ளனர். கடும் மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக ராமநாதபுரம், தூத்துக்குடி பகுதிகளில் கடந்த நவ.,முதல் ஜன., வரை உப்பு உற்பத்தி தடையானது. இதன் காரணமாக, ஜூன் வரை உப்பு தட்டுபாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதனிடையே எதிர்பாராத வகையில் பிப்., முதலே கோடை வெயில் தொடங்கியது.
இதனால், உப்பளங்களில் பாத்திகள் அமைக்கப்பட்டு, உப்பு உற்பத்திக்கான வேலைகள் தடாளடியாக நடந்தது. தற்போது வெயில் உச்சகட்டத்தை எட்டியுள்ள நிலையில், உப்பு உற்பத்தி விரைவாக நடந்து வருகிறது. எதிர்பார்த்ததை விட முன்கூட்டியே அதிக அளவில் உப்பு உற்பத்தி நடந்து வருவதால், இதன் மீதான தட்டுபாடு தவிர்க்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதைதொடர்ந்து பல பகுதிகளுக்கும், உப்பு ஏற்றுமதி செய்யும் பணியும் ஜரூராக நடந்து வருகிறது. கோடை வெயிலின் தாக்கம் வரும் மாதங்களில் இன்னும் அதிகரிக்கும் என்பதால், உப்பு உற்பத்தி இன்னும் பலமடங்கம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மண் புழு திடல் : அமைக்க மானியம்**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி ஒன்றியத்தில், நீர், நிலவள திட்டத்தின் கீழ், தரிசு நிலத்தில் மண்புழு மாதிரி திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 'சில் பாலிங்' முறையில் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு, எக்டேருக்கு 5,000 ரூபாய் மானியம் கிடைக்கும். மக்காச் சோளம் பயிரிடுவோருக்கு, எக்டேருக்கு 4,000 ரூபாய் மதிப்பில் விதை, இடுபொருட்கள் வழங்கப்படும். வம்பன் உளுந்து 80 எக்டேரில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எக்டேருக்கு 1,500 ரூபாய் மானியம் வழங் கப்படும்.
கடலை பயிரிடுவோருக்கு எக்டேருக்கு, 4,000 ரூபாய் மானியம் கிடைக் கும். நீர் பாசன வசதியுள்ள விவசாயிகள் மட்டும் தொடர்பு கொள்ளுமாறு, உதவி இயக்குனர் தொல் காப்பியன் தெரிவித் துள்ளார்

**விவசாய தொழிலாளர் சங்க கூட்டம்**

காரைக்குடி: தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க, மாநில குழு கூட்டம் காரைக்குடியில் நடந்தது. பொது செயலாளர் முத்தரசன் கூறுகையில்,"ஜாதி ஒழிப்பு, தீண் டாமைக்கு எதிராக ஏப்., 24 ம் தேதி சிதம்பரத்தில் மாநில மாநாடு நடத்தப்படும். வறட்சியால் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு பட்ஜெட்டில் அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது," என்றார். எம்.எல்.ஏ., க்கள் குணசேகரன், பத்மாவதி, முன்னாள் எம்.எல்.ஏ., தங்கமணி, மாவட்ட செயலாளர் சாத்தையா, பொரு ளாளர் சந்திரகுமார், நிர்வாகி பெரியசாமி பங் கேற்றனர்

**கரும்பு தோகையை தூளாக்க இயந்திரம் விவசாயிகள் கூட்டத்தில் அதிகாரி தகவல்**

தஞ்சாவூர்:ஒரத்தநாட்டில் கரும்பு தோகை மூலம் கம்போஸ்ட் தயாரித்தல் மற்றும் இயந்திரம் மூலம் கரும்பு தோகையை தூளாக்குதல் குறித்த கூட்டம் நடந்தது.ஒரத்தநாடு கோட்ட கரும்பு அலுவலக எல்லைக்கு உட்பட்ட தெற்குகோட்டை கிராமத்தில் உள்ள பழனிவேல் என்பவரின் கரும்பு வயலில் கூட்டம் நடந்தது.குருங்குளம் சர்க்கரை ஆலை தலைமை கரும்பு அலுவலர் குணசேகரன் தலைமை வகித்து பேசியதாவது:

விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் கரும்பு தோகையை அகற்ற ஏக்கருக்கு ரூபாய் 2 ஆயிரம் வரை செலவு செய்ய வேண்டி உள்ளது. இதனால் அந்த தோகையை தீயிட்டு அழித்தால் வயல் பாதிக்கப்படும். இதைத்தடுக்க வயலிலேயே இயந்திரம் மூலம் கரும்பு தோகையை தூள், தூளாக மாற்ற முடியும்.

இதனால் வயலில் முளைப் புத்திறன் பாதிக்கப்படாது.இந்த இயந்திரத்தின் விலை ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். நாள்ஒன்றுக்கு 5 ஏக்கர் வரை தோகையைதூளாக்க முடியும். இதனால் விவசாயிகள் நல்ல வருமானம் ஈட்ட முடியும் என்றார். கோட்ட கரும்பு அலுவலர் ஜீவானந்தம், கரும்பு விவசாயி பழனிவேலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**பூண்டி கல்லூரியில் நாளை விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

தஞ்சாவூர்:தஞ்சை அருகே பூண்டி கல்லூரியில் விவசாயிகளுக்கான இலவச பயிற்சி முகாம் நாளை நடக்கிறது.பூண்டி கல்லூரியின் தாவரவியல், நுண்ணுயிரியல் துறை, மாநில அறிவியல், தொழில்நுட்பக்கழகம் சென்னை ஆகியன இணைந்து நாளை (25ம்தேதி) விவசாயிகள் மற் றும் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான அறிவியல் விழிப்புணர்வு முகாம் நடத்துகிறது.

உயிர் உரங்கள் மற்றும் இயற்கை வழி வேளாண், உணவு தயாரித்தல் ஆகியவை பற்றிய அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முகாம் ஏற்பாடுகள் அமைக்கப் பட்டுள்ளன.இத்தகவலை கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தாவரவியல் துறை பேராசிரியர் சந்திரசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**தேனி மாவட்டத்தில் பால் உற்பத்தி பாதிப்பு : கால்நடை தீவணங்கள் தட்டுப்பாடு**

கம்பம்: தேனி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு தேவையான பச்சைத் தீவணம் இல்லாத நிலையில், கடைகளில் விற்கப்படும் தீவணங்களின் விலை எகிறி விற்கப்படுகிறது. கால்நடைகளுக்கு குறைந்த அளவு தீவணம் கொடுக்கப்படுவதால், பால் உற்பத்தி குறைந்து வருகிறது. தேனி மாவட்டத்தில், ஆவின் மற்றும் பல தனியார் நிறுவனங்கள் பால் கொள்முதல் செய்கின்றன. தினமும் ஆவின் ஒரு லட்சத்து 45 ஆயிரம் லிட்டர், தனியார் நிறுவனங்கள் 70 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகின்றன. கடந்த ஜன., முதல் பால் கொள்முதல் குறையத் துவங்கியுள்ளது. கோடைகாலங்களில் பால் உற்பத்தி குறைவது வழக்கமானது தான் என்றாலும், இந்த ஆண்டு பால் உற்பத்தியில் கடும் பின்னடைவு ஏற்பட்டுள் ளது. ஆவின் உள்பட அனைத்து நிறுவனங்களின் கொள்முதலில் 10 முதல் 25 சதவீதம் வரை பால் குறைந்துள் ளது. கடந்த ஆண்டுகளை விட இது அதிகம் என பால் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கான காரணங்கள் குறித்து அவர்கள் கூறுகையில் ' பொதுவாக கோடை காலத்தில் பால் வரத்து குறையும். இந்த ஆண்டு போதிய மழை இல்லை. இதனால், வயல் வெளிகளில் பச்சைத் தீவணம் கிடைக்கவில்லை. கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்ப முடியவில்லை. பச்சைத் தீவணம் இருந் தால் தான் அதிக அளவில் மாடுகளுக்கு பால் சுரக்கும். கடைகளில் விற்கப்படும் தீவணங்களை வைத்து ஓரளவு சமாளிக்கிறோம். இந்த தீவணங்களால் மாடுகளுக்கு பெரிய அளவில் பால் சுரக்க வாய்ப்பில்லை. ஓரளவு பால் கிடைக்கும். அதேசமயம் கடைகளவில் தீவணங்களின் விலையும் எகிறி விற்கப்படுகிறது. பெரும்பாலான உற்பத்தியாளர்கள், தீவணங்களை குறைத்து பயன்படுத்தும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

ஊக்கத்தொகை 'சுவாகா': கோடைகாலங்களில் ஆவின் நிறுவனம் லிட்டருக்கு 50 பைசா முதல் ஒரு ரூபாய் வரை ஊக்கத் தொகையாக வழங்கும். இந்த ஆண்டு அந்த தொகை வழங்கப்படவில்லை. அந்த தொகை வழங்கப்பட்டதாக கணக்கு காண்பிக்கப்பட்டதா? அல்லது ஒட்டுமொத்த ஆவினிலும் இந்த ஆண்டு முடக்கப்பட்டதா? என்பது குறித்து அதிகாரிகள் விளக்கம் தர மறுக்கின்றனர். தனியார் நிறுவனங்கள் ஊக்கத் தொகை உள்ளிட்ட பல கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்துள்ளது. பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தனியாருக்கு பால் வழங்கும் நிலைக்கு

தள்ளப்பட்டுள்ளனர்.  பசுந்தீவண உற்பத்தியை பெருக்கவும், கால்நடைத் தீவணங்களுக்கு மானியம் விலையில் விற்கவும் முன்வந்தால் மட்டுமே, உற்பத்தியை பெருக்க முடியும்," என்றனர்.

ஆவின் அதிகாரிகள் கவனத்திற்கு: ஆவினில் தினமும் 2 லட்சம் லிட்டர் வரை விற்பனை செய்யப்படுகிறது. மாவட்டத்தில்  கொள்முதல் ஒரு லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் அள விற்கு தான் வருகிறது.  பற்றாக்குறையை சமாளிக்க திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து வாங்கி வருகின்றனர். நல்ல லாபத்தில் இயங்கி வரும் ஆவின் நிறுவனம்,  உற்பத் தியை பெருக்க விவசாயிகளுக்கு பாலுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், தீவணங்கள் மானிய விலையில் வழங்குதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**ஏலக்காய் விலை உயர்வு எதிரொலி : எகிறி வரும் தோட்டங்கள் விலை**

கம்பம்: ஏலக்காய் விலை வரலாறு காணாத அளவு உயர்ந்துள்ளதால், தோட்டங்களின் விலையும் உயரத் துவங்கியுள்ளது.  ஏலக்காய் விலை கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக குறைவாகவே இருந்து வந்தது. கிலோவிற்கு 400 ல் இருந்து 500 ரூபாய் வரை கிடைத்து வந்தது. சில நாட்கள்  கணிசமாக விலை உயர்வதும், பின்னர் அதாளபாதாளத்திற்கு செல்வதும் வாடிக்கையாக இருந்தது. சாகுபடி அதிகரித்தாலும், குறைந்தாலும் விலை உயராது. ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு என்றால், அந்த பொருளின் விலை அதிகரிக்கும் என்ற பொருளாதார கோட்பாடு, ஏலக்காய் விஷயத்தில் எடுபடவில்லை. எகிறி வரும் தோட்டங்கள் விலை:  கடந்த சில மாதங்களில்,  வரலாறு காணாத அளவிற்கு ஏலக்காய் விலை உயர்ந்தது. கிலோவிற்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகி வருகிறது. இதனால், ஏலத்தோட்டங்களின் விலையும் எகிறத் துவங்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக  ஒரு ஏக்கர் ஏலத்தோட்டம் 6 லட்ச ரூபாய் வரை விலை கிடைத்தது. இஞ்சிப்பிடிப்பு, சேத்துக் குழி, புளியன்மலை, வண்டன்மேடு, சங்குருண்டான், மாலி உள்ளிட்ட குறிப்பிட்ட பகுதிகளில் விலை அதிகமாகவும், நெடுங்கண்டம், சதுரங்காபாறை, ராஜாக்காடு, பாரத்தோடு உள்ளிட்ட பகுதிகளில் விலை குறைவாகவும் இருக்கும்.  ஏலக்காய் விலை உயர்ந்ததில் இருந்து, ஏலத்தோட்டங்களின் விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் விலை 15 லட்ச ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது.

தோட்டங்களுக்கு 'கிராக்கி': யாரும் விற்கத் தயாரில்லை. காரணம் விலை தொடர்ந்து கிடைப்பதால், ஏலக்காய் சாகுபடியில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் குதித்துள்ளனர். ஏலக்காய் சாகுபடியை கை விட்டவர்கள் கூட, மீண்டும் ஏலக்காய் சாகுபடிக்கு திரும்பத் துவங்கியுள்ளனர். சிலர் வேறு வாசனை திரவிய பொருள்களை காலி செய்து விட்டு, ஏலக்காய் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். ஏலத் தோட்டங்களை விற்றவர்களும்,  மீண்டும் ஏலத் தோட்டங்களை வாங்க முன் வந்துள்ளனர்.

ஏலவிவசாயிகள் சிலர் கூறுகையில்," விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்க்காத அளவில் ஏலக்காய்க்கு விலை அதிகமாக கிடைக்கிறது. ஏலத் தோட்டங்களின் விலையும் அதிகரிக்கத் துவங்கியுள்ளது. தோட்டங்களை விலைக்கு வாங்க தினமும் பலர் முற்றுகையிட்டு வருகின்றனர்," என்றனர்.

**வறட்சியால் விளைச்சல் பாதிப்பு : எகிறி விற்கும் பூக்கள் விலை**

கம்பம்: தேனி மாவட்டத்தில் பருவமழை தவறி, கடும் வறட்சி நிலவுவதால் பூக்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டிற்கு வரத்து மிகவும் குறைந்து வருவதால், மல்லிகை முதல் அனைத்து பூக்களின் விலையும் எகிறி வருகிறது. தேனி மாவட்டம் கம்பம் சுற்றுப்புற கிராமங்களிலும், சீலையம்பட்டி, கோட்டூர், பல்லவராயன்பட்டி, சிந்தலச்சேரி,

கிருஷ்ணம்பட்டி உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில்   மல்லிகை, கனகாம்பரம், சம்பங்கி, முல்லை, பிச்சி, செவந்தி, ரோஜா, மரிக்கொழுந்து  உள்ளிட்ட பலவகை பூக்கள்  சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலும் தோட்டங்களில் கிணற்று பாசனமாக பூக்கள் சாகுபடி நடைபெறுகிறது. சில இடங்களில் மானாவாரி பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது.  பெரியாறு பாசன பகுதியில் இருப்பதால், கடந்த ஆண்டுகளில் பூக்கள் விளைச்சல் நன்றாக இருந்தது. இந்த பூக்கள் தினமும் சென்னை, மதுரை, திண்டுக்கல், நிலக்கோட்டை, தேனி, சீலையம்பட்டி, கம்பம் பூ மார்க்கெட்டுகளுக்கும்,கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம், கோட்டயம், பத்தனம்திட்டால் திருவல்லா உள்ளிட்ட நகரங்களுக்கும் பூக்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இப்பகுதி பூக்களுக்கு மார்க்கெட்டுகளில் நல்ல கிராக்கி உண்டு.

பூக்களுக்கு 'கிராக்கி': கடந்த சில ஆண்டுகளாக,  தமிழகத்தில் பல்வேறு நகரங்களிலுள்ள பூ மார்க்கெட்டு களுக்கும், இப்பகுதி  பூக்கள் அனுப்பப்படுகின்றன. இப்பகுதி பூக்களுக்கு மார்க்கெட்டுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. இதனால், பூ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு,  முன்பணம் கொடுத்து கமிஷன் கடைக்காரர்கள் பெரும்பாலான தோட்டங்களுக்கு சென்றே கொள்முதல் செய்கின்றனர். கம்பம், சீலையம்பட்டி பூ மார்க்கெட்டுகளுக்கு,  சமீப காலமாக சிறிய மற்றும் பெரிய வியாபாரிகள் குவிந்து போட்டி போட்டு விலையை உயர்த்தி வாங்கி செல்கின்றனர்.

வறண்ட கிணறுகள்: கடந்த சில மாதங்களாக மழை இல்லாததாலும், பெரியாறு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு வைகை வறண்டிருப்பதால், பெரும்பாலான கிணறுகளில் தண்ணீர் வற்றத் துவங்கியுள்ளது. இத்தண்ணீரை பயன்படுத்தி வந்த தோட்டங்களிலும், வறட்சி தலைதூக்கியுள்ளது. கிணறுகளில் அதளபாதாளத்தில் கிடக்கும் சிறிதளவு தண்ணீர் மூலம், தோட்டங்களில் பூ செடிகள் கருக விடாமல் பார்த்து வருகின்றனர்.

பூக்கள் விலை உயர்வு:  நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்து வருவதால், பூக்கள் விளைச்சல் குறைந்து வருகிறது. முல்லை, பிச்சி, கனகாம்பரம் போன்ற பல பூக்கள் விளைச்சல் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.  இதனால் மார்க்கெட்டுகளுக்கு பூக்கள் வரத்து குறைந்துள்ளது. இதனால் பூக்கள் விலை எகிறி விற்கிறது. நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி, கடந்த வாரம் கிலோ ரூ.50க்கு விற்ற மல்லிகை ரூ.80க்கும், ரூ.40க்கு விற்ற சம்பங்கி ரூ.120க்கும், ரூ.40க்கு விற்ற ரோஜா ரூ.70க்கும் விற்கப்பட்டது. மற்ற பூக்கள் வரத்து இல்லை. சில்லரை விற்பனையில் இப்பூக்களின் விலை, மேலும் கூடுதலாக விற்கப்படுகிறது.

கம்பம் மார்க்கெட் பூ வியாபாரிகள் சிலர் கூறுகையில், "சில வாரங்களாக பூக்களின் வரத்து குறைந்துள்ளது. கேரளாவிற்கு குறைந்த அளவே அனுப்பப்படுகிறது. பூக்களின் விலை உயர்ந்து வருகிறது. மழை பொய்த்து இதே நிலை நீடித்தால் பூக்களின் விலை மேலும் உயரும்," என்றனர்.

**தென்னை நார்க்கழிவுகளை உரமாக்க மகளிர் குழு ஏற்பாடு**

பெரியகுளம்: தென்னை நார்கழிவை இயற்கை சுழற்சி மூலம் நிலங்களுக்கு உரமாக மாற்றி, விற்பனை செய்வதற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஏற்பாடு செய் துள்ளனர். பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.  பெரியகுளம், கள்ளிப் பட்டி, கைலாசபட்டி பகுதியில் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கப்பட்டு,  நார்கழிவுகள் வீணாக்கப்படுகின்றன.

இந்த கழிவுகளால் சுற்றுப் புறத்தில் தேவையற்ற பிரச்னைகளும், சுகாதாரக்கேடும் ஏற்படுகிறது.  நார்கழிவுகளை தீயிட்டு கொளுத்துவதால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது.  பெரியகுளம் பகுதி மகளிர் சுய உதவிக்குழுவினர், இந்த நார்கழிவுகளை சுழற்சி முறையில் பயன் பாட்டிற்கு கொண்டு வர முயற்சித்து வெற்றியும் பெற்றுள்ளனர். இவற்றை இயற்கை உரமாக பயன்படுத்தி மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க செய்கின்றனர். ஒரு எக்டேர் பரப்பளவிலுள்ள, தென்னையிலிருந்து ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரை மட்டைகள் கிடைக்கிறது.

இவற்றிலிருந்து ஒரு டன் எடையுள்ள நார்கழிவுகள் கிடைக்கும். சில மகளிர் குழுவினர், இவற்றை  சிப்பிக்  காளானை

பயன்படுத்தி சத்துமிக்க இயற்கை உரமாக தயாரித்து வருகின்றனர். விரைவில் இந்த உரத்தை விற்பனைக்கு கொண்டு வரவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

**தேங்காயை விற்று பயன்பெற வேளாண்மை துறை அறிவுரை**

விழுப்புரம்: விலை அதிகரிக்க வாய்ப் பில்லாததால் விவசாயிகள் தங்களிடம் இருக்கும் தேங் காயை உடன் விற்று பயன் பெறலாம் என வேளாண் துறை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார். இது குறித்து வேளாண் துறை இணை இயக்குனர் ராமலிங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: அதிகளவில் இறக்குமதி செய்யும் பாமாயிலினால் வருங்காலங்களில் தேங் காய் விலை குறையுமா என்ற அச்சம் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்த தேங் காயை உடன் விற்பதா, சேமித்து வைப்பதா என கேள்வி எழுப்புகின்றனர். இதையடுத்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு, ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தினர் ஆய்வு மேற்கொண்டனர். இதில், பிப்ரவரி முதல் ஜூன் மாதம் வரை தேங் காய் வரத்து அதிகமாகவும், ஜூலை முதல் டிசம்பர் வரை வரத்து குறைவாக இருக்கும். மார்ச் முதல் ஜூன் மாதம் வரை வரியில்லாத பாமாயில் இறக் குமதி போன்ற காரணங் களால் தேங்காய் விலை மார்ச் முதல் ஜூன் மாதம் வரை இறங்குமுகமாக இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற் றுமதி சந்தை தகவல் மைய ஆய்வின்படி மார்ச் முதல் ஜூன் வரை தேங் காய் விலை அதிகரிக்க வாய்ப் பில்லை. இதனால் விவசா யிகள் தங்களிடம் இருக் கும் தேங்காயை உடன் விற்று பயன்பெறலாம்.

**பருத்தி விற்பனை செய்து பயன் பெறலாம் : விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை**

விழுப்புரம்: விலை அதிகரிக்க வாய்ப்புகள் இல்லாததால் பருத்தி இருப்பு வைத்துள்ள விவசாயிகள் விரைவில் விற்பனை செய்து பயன்பெறலாம் என வேளாண்துறை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் ராமலிங் கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடந்த பருத்தி ஆண்டில் அக்டோபர் 2008 முதல் செப்டம்பர் 2009 வரை பொருளாதார பின்னடைவு காரணமாக ஏற்பட்ட ஏற்றுமதி சரிவால் பருத்தி விலை குறைந்திருந்தது. மத்திய அரசு பருத்திக்கான குறைந்தபட்ச ஆதார விலையை 30 சதவீதம் உயர்த்தியதால் பருத்தி விவசாயிகளுக்கு உதவியாக இருந்தது. நடப்பு பருத்தி ஆண்டு அக். 2009 முதல் ஏறுமுகமாகி குறைந்த பட்ச ஆதார விலையை விட அதிகமாக உள்ளது. விவசாயிகள் பி.டி.,பருத்தி மற்றும் டி.சி.என்.,32 ஆகியவற்றை அதிகம் பயிரிடுகின்றனர். டி.சி. எச்.,32 மிக நீண்ட இழை பருத்தியாகும். இதற்கு மற்ற பருத்தி ரகங்களைவிட 800 முதல் 1000 ரூபாய் வரை கூடுதல் விலை கிடைக்கிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம் பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் தேசிய வேளாண்மை புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு மேற்கொண் டது. இந்த ஆய்வில், நீண்ட இழை பருத்தி வகைகளுக்கு இந்த ஆண்டு மார்ச் முதல் செப்டம்பர் மாதம் வரை குவிண்டாலுக்கு 3300 முதல் 3500 ரூபாய் வரை விலை கிடைக் கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு மேல் விலை அதிகரிக்க வாய்ப்புகள் இல்லாததால் பருத்தி இருப்பு வைத்துள்ள விவசாயிகள் விரைவில் விற்பனை செய்து பயன் பெறலாம்.

**பண்ணை சாராக் கடன் நிலுவை செலுத்த கூட்டுறவு வங்கி தனி அலுவலர் அறிவுரை**

விழுப்புரம்: பண்ணை சாராக் கடன் தீர்வு திட்டத்தில் நிலுவைத் தொகையை செலுத்தி அரசின் சலுகையை பெற்று பயன் பெற கூட்டுறவு வங்கி தனி அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம்பாள் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தமிழக அரசின் பண்ணை சாராக் கடன்கள் சிறப்பு கடன்

தீர்வுத்  திட் டத்தின்படி ஏற்கனவே 25 சதவீதம் கடன் தொகையை செலுத்தி மத்திய வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கடன்தாரர்கள் 75 சதவீதம் நிலுவைத் தொகையை வரும் 31ம் தேதிக்குள் செலுத்தி அரசு அறிவித்துள்ள வட்டி சலுகையை பெற்று பயனடையலாம். அதன்பிறகு அரசு அறிவித்த வட்டி சலுகையை இழக்க நேரிடும்.
மேலும் மத்திய  வங்கியில் 31.3.2007ல் கடன் தொகை முழுவதும் செலுத் தாமல் தவணை தவறி அந்த கடன் 31.7.2009ல் நிலுவை நின்று இது வரை சிறப்பு கடன் தீர்வு திட்டத் தில் பணம் செலுத்தாமல் இருப்பவர்களுக்கு அரசு சலுகை வழங்கப்படும். இதன்படி பயனாளிகள் கடன் தொகைக்கு 6 சதவீத சாதாரண வட்டி கணக் கிட்டு அசல் மற்றும் வட் டித் தொகை முழுவதையும் ஒரே தவணையில் வரும் 31ம் தேதிக்குள் மொத் தமாக செலுத்தி அரசின் சலுகையை பெறலாம். அரசு அறிவித்துள்ள சலுகை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் பண்ணை சாராக் கடன் பெற்றவர்களுக்கும் பொருந்தும். இம்மாத இறுதிக்குள் தகுதியுள்ள கடன்தாரர்கள் அரசின் சலுகையை பெற்று பயன் பெறலாம்.

**பருப்பு விற்பனை மந்தம்; ஆயில் விலை அதிகரிப்பு**

திருப்பூர்: திருப்பூர் தெற்கு உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி ஆறு ரூபாய்க்கு விற்கிறது. திருப்பூர் தெற்கு உழவர் சந்தை நிர்வாக அதிகாரி அறிவழகன் கூறியதாவது: பச்சை மிளகாய் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளது. பச்சை மிளகாய் கிலோ 30 ரூபாய்; கத்தரி 25; வெண்டை 20; தக்காளி 6; அவரை 25; புடலை 10; பீர்க்கன்காய் 20; சுரைக்காய் 5; பாகை 16; பூசணி 5; அரசாணி 5 ரூபாய்க்கு விற்கிறது. சின்ன வெங் காயம் கிலோ 10, பெ.வெங்காயம் 13; முருங்கை 15; தேங்காய் 10; சேனை கிழங்கு 15; உருளை 15; கேரட் 25; சாதா பீன்ஸ் 30; பீட்ரூட் 10; கோஸ் 12; காலிபிளவர் 8; முள்ளங்கி 10; மேரக்காய் 10; கொத்தமல்லி 15; கீரை வகைகள் 15; கருவேப்பிலை 25; வாழைக்காய் 10; இஞ்சி 40; சப்போட்டா பழம் 10; வாழை பழம் 15; தர்பூசணி 3 ரூபாய் என விற்கப்படுகிறது, என்றார். தங்கம் விலை இறக்கம்: தங்க நகை வியாபாரிகள் சங்க நிர்வாகி கூறுகையில், 'தங்கத்தின் விலையில் சிறு இறக்கம் ஏற்பட்டுள்ளது. இன்று (நேற்று) ஒரு கிராம் 1,555 ரூபாய்க்கு விற்றது; பவுன் 12,440 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராம் 29.00 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஏப்., துவங்கிய பின், விற்பனையிலும், விலையிலும் மாற்றம் வரலாம்,' என்றார். முட்டை விலை குறைவு: முட்டை வியாபாரி லோகநாதன் கூறியதாவது: வெயில் காலம் துவங்கி விட்டதால், முட்டையின் தேவை குறைந்துள்ளது. விற்பனையை அதிகரிக்கும் விதமாக, முட்டைக்கு 10 காசு வரை குறைந்துள்ளது. கொள்முதல் விலையில் 2.35 ரூபாயில் இருந்து 2.25 ரூபாயாக குறைந்துள்ளது; மொத்த விற்பனையில் 2.30; சில்லரை விற்பனையில் 2.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார். பூ விலை அதிகரிக்கும் வாய்ப்பு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், "முகூர்த்த நாட்கள் நெருங்கி வருவதால், பூ விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. நாளை (இன்று) முதல் பூக்கள் விலை உயரும் வாய்ப் புள்ளது. மல்லிகை கிலோ 120; கனகாம்பரம் 160; செவந்தி 80; அரளி 100; சம்பங்கி 100; முல்லை 300; பெங் களூரு மல்லி 140; மாலை பெரியது 120 முதல் 150 வரை, சிறியது 40 ரூபாய் என விற்கிறது," என்றார்.
ஆயில் விலை அதிகரிப்பு: திருப்பூர் சமையல் ஆயில் விற்பனையாளர் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், "ஆயில் விற்பனை ஓரளவுக்கு உள்ளது. ஆயில் விலை டின்னுக்கு 10 ரூபாய் வீதம் உயர்ந்துள்ளது. வரும் நாட் களில் சில்லரை விற்பனையில் கிலோவுக்கு சிறிய தொகை உயரும் வாய்ப்புள்ளது. நல்லெண்ணெய் 91; விளக்கெண்ணெய் 80; கடலை எண்ணெய் 73; ரீபன்ட் ஆயில் 82; சூரிய காந்தி எண்ணெய் 60; தேங்காய் எண்ணெய் 60; நெய் 280 ரூபாய் என விற்கிறது," என்றார். பருப்பு விற்பனை மந்தம்: தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ர  மணியம் கூறுகையில், "வெயில் அதிகரித்து வருவதால் பகலில் வர்த்தகம் பாதிக்கிறது. சர்க்கரை கிலோ 33 ரூபாய்; துவரம் பருப்பு 56; பச்சைப்பயிறு 68; பாசிப்பருப்பு 80; வெள்ளை உளுந்து 68 முதல் 70 வரை; கருப்பு உளுந்து 58; தட்டப்பயறு 38; கொள்ளு 22; சுண்டல் கடலை 32 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

**கொப்பரை கொள்முதல் மையங்களில் நேபட், டான்பெட் அதிகாரிகள் ஆய்வு**

பல்லடம்: 'பல்லடம், செஞ்சேரி அரசு கொப்பரை கொள் முதல் நிலையங்களில் இதுவரை எவ்வளவு ரூபாய்க்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது; தரமான கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா; ஏதாவது குறைபாடு உள்ளதா' என, நேபட், டான்பெட் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் தேசிய கூட்டுறவு விற்பனை நிலையம் (நேபட்), தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையம் (டான்பெட்) இணைந்து உள்ளூர் மார்க்கெட்  கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்து, உள்ளூர் மார்க்கெட் சொசைட்டி மூலம் விவசாயிகளிடம் கொப்பரை கொள்முதல் செய்கிறது. ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய் வீதம் கொள்முதல் செய்யப்படுகிறது. பல்லடம், செஞ்சேரியில் உள்ள கொள்முதல் மையத்தில் கடந்த ஏப்., முதல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தற்போது வரையிலான 11 மாதங்களில், பல்லடம் மற்றும் செஞ்சேரி மையங்களில் 28 கோடி ரூபாய்க்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மார்ச் மாதம் கணக்கு முடிக்கப்படும் என்பதால், வாரத்தில் ஐந்து நாட்கள் கொள்முதல் நடக்கும் செஞ்சேரி மையத்தில் கடந்த இரண்டு நாட்களாக கொப்பரை கொள் முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.  கடந்த மூன்று நாட்களாக டான்பெட், நேபட் அதிகாரிகள் பல்லடம், செஞ்சேரி கொள்முதல் மையங் களில் ஆய்வு செய்து வருகின்றனர். கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரை விபரம்; கொள்முதலுக்கு வினியோகம் செய்யப்பட்ட பணம் பட்டுவாடா விபரம்; கொள்முதல் செய்த கொப்பரை, இருப்பு வைக்கப்பட்ட  குடோன் விபரம்; தரமான கொப் பரைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா; ஏதாவது முறைகேடு நடந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்கின்றனர். கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரைகளில் சில மூட்டைகள், தரமில்லாதவையாக இருந்துள்ளதை அதிகாரிகள் கண்டுபிடித்து கொள்முதலில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டுள்ளனர். இன்றுடன் கணக்கு சரிபார்ப்பு, தரம் ஆய்வு, இருப்பு போன்ற பணிகள் நிறைவு பெறுவதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

21 கிலோவில் விளைந்த அரசாணிக்காய்

அவிநாசி: பெருமாநல்லூர் அருகே பனியன் தொழிலாளி வீட்டில் 21 கிலோ எடை யுள்ள அரசாணிக்காய் காய்த்துள்ளது. பெருமாநல்லூர் அருகே ஈட்டிவீரம் பாளையத்தைச் சேர்ந்தவர் சுந்தர்ராஜ்; பனியன் கம்பெனி கட்டிங் மாஸ்டர். இவரது த்ட்டின் முன்பகுதியில் சிறிய அளவில் தோட்டம் அமைத்துள்ளார். அரசாணி, புடலங்காய், சுரைக்காய், பீர்க் கங்காய், பாகற்காய் பயிரிட்டுள்ளார். காய் கறிகள் நன்றாக விளைச்சல் கண்டுள்ளன. மற்ற காய்கறிகள் வழக்கமான எடையில் உள்ள நிலையில், அரசாணிக்காய் மட் டுமே பெரிதாக விளைந்துள்ளது. பாரம் தாங்காமல் கொடியிலிருந்து விழுந்தது. மெகா சைஸ் அரசாணிக்காயின் மொத்த எடை 21 கிலோ.

மக்காச்சோளம் விலை உயர்ந்தது

பல்லடம்: ஆந்திரா, கர்நாடகா மாநிலத்தில் இருந்து பல்லடம், உடுமலை பகுதிக்கு மக்காச்சோளம் வரத்து குறைவு, உள்ளூர் உற்பத்தி நிறைவு எதிரொலியால், மக்காச்சோளம் கொள்முதல் விலை ஒரே வாரத்தில் மூட்டைக்கு 30 ரூபாய் உயர்ந்தது. பல்லடம், உடுமலை, பொங்கலூர்  பகுதியில் 8,000க்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் உள்ளன. தமிழகம் மற்றும் கேரளாவிற்கு தினமும் ஆறு லட்சம் கோழிகள் வரை கொண்டு செல்லப் படுகின்றன. கறிக்கோழிகளுக்கு உணவாக புரோட்டின் சத்து நிறைந்த கோழித்தீவனம் வழங்கப்படுகிறது. தீவனம் தயாரிக்க பயன்படும் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் உள்ளது. தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளம் பங்கு 50 சதவீதம். பல்லடம், பொங்கலூர், உடுமலை  பகுதியில் உள்ள கறிக்கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க, பல்லடம் மற்றும் உடுமலை, அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் மக்காச்சோளம் கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து வரும் மக்காச்சோளம்  கொள்முதல் செய்யப்படுகிறது.  இரண்டு வாரத்துக்கு முன் 100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம்,  பல்லடம் மற்றும் உடுமலை விவசாயிகளிடம் இருந்து 900 ரூபாய்க்கு வியாபாரிகளால்,  தாங்களாகவே தீவனம்  தயாரிக்கும் பண்ணையாளர்களால் கொள்முதல் செய்யப்பட்டது.  கடந்த ஒருவாரமாக கர்நாடகா மற்றும்

ஆந்திராவில் இருந்து பல்லடம், உடுமலை, பொங்கலூர் பகுதிக்கு வரும் மக்காச்சோளம் வரத்து சற்று குறைந்துள்ளது. உள்ளூர்களிலும் பெருமளவு அறுவடை முடிந்து விட்டது.

இதன் எதிரொலியாக, 900 ரூபாயாக இருந்த மக்காச்சோளம் மூட்டை, தற்போது மூட்டைக்கு 30 ரூபாய் அதிகரித்து 930 ரூபாயாக உள்ளது. ஒரே வாரத்தில் மூட்டைக்கு 30 ரூபாய் விலை உயர்வு உள்ளூர் மக்காச்சோள விவசாயிகளை உற்சாகம் அடையச்செய்துள்ளது. மக்காச்சோளத்திற்கு தொடர்ந்து 'கிராக்கி' ஏற்பட்டால் கொள்முதல் விலை மூட்டைக்கு மேலும் 20 முதல் 30 ரூபாய் வரை அதிகரிக்கலாம். இதனால், மக்காச்சோளம் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மக்காச்சோளம் விலை உயர்வு கோழித்தீவனம் விலையை உயர்த்தும் என்பதால், சிறு பண்ணையாளர்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

**நிலக்கடலை வரத்து குறைவு**

அவிநாசி: சேவூர் ஏலத்துக்கு நிலக் கடலை வரத்து வெகுவாக குறைந்தது; அடுத்து வரும் வாரங்களில் வரத்து அதி கரிக்கும் வாய்ப்பு உள்ளது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந் தோறும் நிலக்கடலை ஏலம் நடந்து வருகிறது. இந்த வார ஏலத்துக்கு 9.65 குவிண் டால் மட்டுமே வரத்தாக இருந்தது. இது, கடந்த வார அளவு என்றாலும், சில வாரங் களாக வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்த ஏலத்துக்கு முதல் ரகம் மட்டும் இருந்ததால், குவிண்டாலுக்கு ரூ.2,710 முதல் ரூ.2,890 வரை ஏலம் போனது. ஒழுங்குமுறை விற் பனை கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) நட ராஜன் கூறுகையில், "தற் போது சீசன் முடிந்துள்ளதால் வரத்து குறைந்துள்ளது. இன் னும் இரண்டு வாரங்களில், இருப்பு வைத்துள்ள காய் களை விவசாயிகள் ஏலத் துக்கு கொண்டு வருவர்," என்றார்.

**நெகமம் கொப்பரை கிலோ 32 ரூபாய்**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் , ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 17 பேர் கொப்பரை மூட்டைகளை கொண்டு வந்தனர். ழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை, கிலோவுக்கு குறைந்தபட்சம் 30 ரூபாய் முதல், அதிகபட்சம் 32 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை, கிலோவுக்கு குறைந்தபட்சம் 24.15 ரூபாய் முதல், அதிகபட்சம் 29.25 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**சின்ன சின்ன செய்திகள்**

*மார்ச்* 23,2010,12:06 IST

 

தேங்காய்: பலவித பலன்களைக் கொண்டது. கேரள மக்கள் ஆரோக்கியத்தோடு இருப்பதற்கும் புத்தி கூர்மையோடு செயல்படுவதற்கும் காரணம் தேங்காய்தான். தேங்காயை மட்டுமே காலை உணவாகச் சாப்பிட்டு வாழ்க்கையை நடத்தும் இயற்கைநல வாதிகள் (சமைக்காமல் உண்பவர்கள்) உலகெங்கும் உண்டு.
இளநீரின் பயன்கள் எண்ணற்றவை. நம் உடல் உஷ்ணத்தைப் போக்குகிறது. களைப்பை நீக்குகிறது. நரம்புகளுக்கு பலத்தைத் தருகிறது. மூல நோயைக் கட்டுப்படுத்துகிறது. மலச்சிக்கலை நீக்குகிறது. ஜீரண உறுப்புகள் நன்கு வேலை செய்ய உதவுகிறது. காலை முதல் இரவு வரை சுறுசுறுப்புடனும் புத்துணர்ச்சி யுடனும் செயல்பட பெரிதும் உதவுகிறது. ரத்தத்தை சுத்தமாக்கி புதிய ரத்தசெல்களை உருவாக்குகிறது. வாய்ப்புண் ஆற வேண்டுமா? தேங்காய்ப்பாலை காலை வேளையில் உணவுக்கு முன் பருகிவந்தால் ஒரு வாரத்தில் குணமாகும். ஞாபகசக்தி வேண்டுமா? தேங்காயுடன் பாதாம்பருப்பு, வேர்க்கடலை இவைகளை சேர்த்து சாப்பிட்டால் ஞாபகசக்தி வளரும்.
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**தேனீக்கள், தேன்கூடு மற்றும் தேனீ** சம்பந்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் தேனீ வளர்ப்பு பயிற்சி ஆகியவை பற்றி அறிய தொடர்புமுகவரி: ஜோஸ்பின் செல்வராஜ், 759, கற்பகம் நகர், 4வது தெரு, கோ.புதூர், மதுரை-625 007. 98655 55047, 98658 73370. விபிஸ் இயற்கை தேனீ பண்ணை, கள்ளிவேலிபட்டி, கொண்டயம்பட்டி வழி, வாடிப்பட்டி தாலுகா, மதுரை. 0452-2567 7947.

**பால் விற்பனையில்** வருமானத்தை அதிகரிக்க பாக்கெட் போடுங்க என்கிறார் அனுபவ விவசாயி செங்கல்பட்டு முகுந்தன். கறந்த பாலை தானாகவே பாக்கெட் போட்டு விற்பனை செய்யும்போது கூடுதல் விலை கிடைப்பதோடு வாடிக்கையாளர்கள் மிகவும் விரும்பி வாங்கிப்போகிறார்கள் என்கிறார். பால் மாடு வைத்திருக்கும் விவசாயிகள் பால் உற்பத்தி செய்றதுல கெட்டிக்காரத்தனமாக இருக்காங்க. ஆனா அதை விற்கிறதுல அக்கறை காட்டுவதில்லை. வியாபாரிகளும் நிறுவனங்களும் லிட்டர் 12 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரைக்கும் வாங்கி, வெளிச்சந்தையில் லிட்டர் 20 முதல் 25 ரூபாய் வரைக்கும் விற்குறாங்க. இதற்கு ஒரே தீர்வு விவசாயி உற்பத்தி செய்யும் பாலை தானே பாக்கெட் போட்டு நேரடியா விற்பனை செய்வதுதான். ஒரு சொட்டு தண்ணீர் கலக்காம கறந்த உடனேயே பாக்கெட்ல அடைச்சு சீல் பண்ணி ஒரு மணி நேரத்தில் கொடுத்தாலும் விற்னை பிரச்னை இல்லாமல் போயிருச்சு என்கிறார் விவசாயி. மேலும் விபரங்களுக்கு: முகுந்தன், 93823 37818.

**வீரிய ஒட்டுரக காய்கறி நாற்றுகள்:** பசுமை குடிலில் குழித்தட்டு முறையில் வளர்க்கப்பட்ட அனைத்துவகை வீரிய ஒட்டு ரக காய்கறி நாற்றுகள் வாங்க அணுக வேண்டிய முகவரி: ஸ்ரீ காமேஸ்வர் ஹைடெக் நர்சரி, கொடுவாய்- பொள்ளாச்சி ரோடு, வெள்ளனத்தம், பொங்கலூர் வழி, பல்லடம் தாலுகா, திருப்பூர்-638 667. 99426 39042, 0421-231 9444.

நவீன தொழில்நுட்பம் மார்ச் 23,2010,12:04 IST

சினை மாடுகளுக்கான பராமரிப்பு முறைகள்: முதல் இரு மாத சினைகாலத்தில் குடற்புழு நீக்க மருந்துகளை அளிக்காமல் இருப்பது நல்லது. சினைக் காலத்தில் கடைசி 2 மாதங்களில் வழுக்கும் தரையிலோ அல்லது கூட்ட நெரிசலிலோ மாடுகளை செல்ல அனுமதிக்கக்கூடாது. சினைமாடுகளை காலைப் பொழுதில் 4-5 மணி நேரம் மேயவிடுவது எளிய உடற்பயிற்சியாக அமைகிறது. அனைத்து சத்துக்களும் அடங்கிய தீவனங்களை அளிக்க வேண்டும். ஒவ்வொரு சினைமாடு கிடேரிகளுக்கும் தினசரி தீவனங்களுடன் அதிகமாக ஒரு கிலோ அடர்தீவனம், 7 மாதத்திலிருந்து அளிக்க வேண்டும். கன்று ஈனும் 2 மாதத்திற்கு முன் 4-5 கிலோ அடர்தீவனமும் அளிக்க வேண்டும்.
கன்று ஈனுவதற்கு 60 நாட்களுக்கு முன் பால் கறவையை நிறுத்திவிட வேண்டும். அப்பொழுதுதான் அடுத்த கறவையில் கூடுதலான பால் உற்பத்தியைப் பெறமுடியும். தொடர்ந்து பால் கறந்து கொண்டிருக்குமானால் அவற்றின் கறவை நேரத்தைத் தள்ளிப்போடுதல், தீவனம், தண்ணீர் இவற்றைக் குறைத்தல் போன்றவைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சினை மாடுகள் சில சமயங்களில் சினைப்பருவ அறிகுறிகளைக் காண்பிக்கும். இந்த சினைப்பருவத்தினால் கருவிற்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஆயினும் இதுபோன்ற சந்தேகங்களைத் தவிர்க்க சினைக்காலத்தில் 3 மாத கால இடைவெளியில் மீண்டும் இரண்டாவது முறையாகப் பரிசோதித்து சினையினை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதிக தூரம் நடக்க விடுவது, விரட்டுவது, மேடு பள்ளமானபகுதிகளுக்கு மேய்ச்சலுக்கு அனுப்புவது ஆகியவை கூடாது. கருப்பை சுழற்சி மற்றும் கருப்பை அழற்சி போன்ற காரணங்களினால் கன்று ஈனும் காலம் தாமதமாகலாம். அவ்வாறு கன்று ஈனும் நாள் தாமதமானால் கால்நடை மருத்துவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.
கன்று ஈனும் காலம் நெருங்கும்போது அவைகளை மற்ற மாடுகளிலிருந்து பிரித்து கொட்டகையில் கட்டுவது நல்லது. கருச்சிதைவு ஏற்பட்ட மாடுகளோடு கலக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கன்று ஈனும் அறை சுத்தமாகவும் சுகாதாரமாகவும், தேவையான இட வசதியுடனும் இருக்க வேண்டும். சினை மாடுகளில் மேற்கூறிய அனைத்து பராமரிப்பு முறைகளையும் பின்பற்றி பராமரித்து வந்தால் கன்று ஈனும் சமயத்திலும் ஈன்றபிறகும் ஏற்படும் அதிக பாதிப்புகளை குறைக்க முடியும். மேலும் அடுத்த கறவையில் கூடுதலான பால் உற்பத்தியையும் பெறமுடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.
(தகவல்: அ.க.திருவேங்கடன், இணை பேராசிரியர், விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்க துறை, கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-637 002)

**வான்கோழி வளர்ப்பு**
மார்ச் 23,2010,12:03 IST



வான்கோழிகள்பெரும்பாலும் அடைகாப்பது இல்லை. வான்கோழி முட்டையை மழை, பனிக்காலத்தில் 7 நாள் வரையிலும், காற்று இளவேனிற் காலத்தில் 6 நாள் வரையிலும், வெயில் காலத்தில் 4 நாள் வரையிலும் சேமித்து அடை வைக்க பயன்படுத்த வேண்டும். நாட்டுக்கோழி அடைகாக்கும் பருவத்தில் வான்கோழி முட்டைகளை வைத்து குஞ்சுகள் பொரிக்கும் வழக்கம் உண்டு. நாட்டுக் கோழிகளில் 7 முட்டை வரையிலும் அடை வைக்கலாம். அடைகாக்கும் நாள் 28. செயற்கை முறையில் பொரிக்க இன்குபேட்டர் எந்திரத்தைப் பயன்படுத்தலாம். பெரும்பாலும் தற்பொழுது இம்முறையே பயன்படுத்தப்படுகிறது.

வான்கோழி குஞ்சு பருவம்: வான்கோழி வளர்ப்பில் மிக முக்கியமான காலகட்டம் ஒரு மாதம் வரை வளர்ப்பதாகும். பொரித்த குஞ்சுகளை முடி உலர்ந்த பின் செயற்கை வெப்பமாக புரூடர் அமைத்து புரதம் நிறைந்த தீவன உணவு கொடுக்க வேண்டும். குளூகோஸ் கலந்த குடிநீரை வைக்க வேண்டும். வறுகடலை தூள் செய்து உணவாக கொடுக்கலாம். அவித்த முட்டையின் வெண்கரு மட்டும் எல்லாவகை தானியங்களுடன் கலந்து கொடுக்கலாம். இதற்கென்று பிரத்யேகமாக குஞ்சு தீவனங்கள் தயாரிப்பாளர்கள் உண்டு. வாங்கியும் பயன்படுத்தலாம். குஞ்சு பருவத்தில் குடிநீரினால் பெருமளவு உயிர் சேதாரம் ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்க்க குடிநீரை கோழியின் நோய் ஆய்வகம், கால்நடை பல்கலைக்கழகம், நாமக்கல் (04286-266 226) என்ற விலாசத்தில் இயங்கும் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்து குடிநீரைக் கொடுக்க வேண்டும். தீவன மூலப் பொருள்களில் அப்ளோடாக்சின் என்ற கொடிய நச்சினால் வான்கோழி குஞ்சுகள் இறக்கும். இதனை தவிர்க்க மக்காச்சோளம், மீன் தூள், புண்ணாக்கு வகைகள், தானியங்கள், தவிடு மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் தீவன பகுப்பாய்வு மையம் (04286-266 288) கால்நடை பல்கலைக்கழகம், நாமக்கல் என்ற விலாசத்தில் இயங்கும் தர ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்து கால்நடை மருத்துவர் ஆலோசனை பெற்று தீவனம் தயாரித்துக் கொடுக்க வேண்டும். 20 நாளைக்கு பின் பசுந்தீவனங்களைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும்.

வான்கோழி குஞ்சு வளரும் பருவம்: இந்த காலகட்டத்தில் வான்கோழிகள் பசுமையான இலைகளை விரும்பி உண்ண ஆரம்பிக்கும். குதிரைமசால், வேலிமசால், முயல்மசால், காசினி கீரை, அகத்தி, கேரட், கல்யாணி முருங்கை, சித்தகத்தி, (சுபாபுல், கிளரிசிடியா இலைகளை வாடவிட்டு கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்) அருகம்புல், பொடுதலை, கோரை புற்கள், காராமணி, சவுண்டல், கடலைக்கொடிகள், மல்பெரி முருங்கை, கோ வைகை மாட்டு தீவன புல், கீரை வகைகள், காய்கறி, பழங்கள் என இயற்கையாக கிடைப்பவைகளை உணவாகக் கொடுக்கலாம். மழைக்காலங்களில் தேங்கிய மழைநீர் மண் படிந்த இலைகளைக் கொடுக்கக்கூடாது.

தோப்புகள் விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள், மலர்த்தோட்டம், பழத்தோட்டம், தென்னந் தோப்புகள் இவைகளில்

வான்கோழி வளர்க்கலாம். விவசாயத்தில் தீமை செய்யும் புழு, பூச்சி, கொசுக்களை உணவாக உட்கொண்டு பாதுகாக்கிறது. தென்னையில் உள்ள காண்டாமிருக வண்டு குப்பை கூளங்களில் முட்டை இட்டு புழுக்களை பெருக்கும் அந்த இளம்புழுக்களை வான்கோழி உணவாக உட்கொள்வதால் காண்டாமிருக வண்டு கட்டுப்படும். அரிசி, நெல்மணிகளை பெருமளவு கொடுப்பதை தவிர்க்க வேண்டும். குடிநீரினை நிழலான இடங்களில் வைக்க வேண்டும். வெயில் பட்டு குடிநீர் சூடாவதை தவிர்க்க வேண்டும்.

முட்டை பருவம்: வான்கோழிகளின் பெட்டை சுமாராக 7, 8 மாதங்களில் முட்டை இட ஆரம்பிக்கும். இந்த காலகட்டத்தில் வான்கோழிகள் பெட்டை குறைவாகவும், சேவல் அதிகமாகவும் இருந்தால் சேவல் சண்டை இட்டுக்கொள்ளும் ரத்தக்காயம் ஏற்படும். கோழியில் இருந்து முட்டை வந்ததா, முட்டையில் இருந்து கோழி வந்ததா என்று விவாதிக்காமல் கோழியில் இருந்து எப்படி பணம் ஈட்டலாம் என்று உருப்படியாக தொழில் செய்யலாம்.

வான்கோழிக்கு எதிரிகள் நாய், நரி, கீரி, காட்டுபூனை, வீட்டுப்பூனை, வல்லூறு திருடர்கள், காக்கை, கழுகு இவைகளில் இருந்து தப்பிக்க ஒரு வளர்ந்த வான்கோழிக்கு 5 சதுர அடி இடம் என்ற வகையில் கொட்டகை அமைத்து வளர்க்கலாம்.

மேலும் இயற்கை வேளாண் பற்றி பயிற்சியும், தேவையான இடுபொருள்களும் உள்ள வானொலி உழவர் சங்கம், திருச்சி-2. 0431-271 6891ல் வான்கோழி தீவனங்கள் நல்ல முறையில் கிடைக்கிறது.

தொடர்புக்கு: கே.வி.பாலு மற்றும் கே.வி.நடராஜ், 94431 30802, 98949 15222.

-கே.சத்தியபிரபா, 67, சர்வலட்சுமி இல்லம், செல்லம் குடியிருப்பு, உடுமலை-642 126.

**சிதம்பரம், காட்டுமன்னார்கோவிலில் உளுந்து அறுவடை துவங்கியது: போதிய விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் பாதிப்பு**

மார்ச் 24,2010,00:00 IST



சிதம்பரம்: காவிரி கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் உளுந்து அறுவடை துவங்கியுள்ளது. விதை கிடைக்காதது, பருவம் தவறிய மழை, தண்ணீர் தாமதம் போன்ற காரணங்களால் விளைச்சல் குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் சில ஆண்டாக பருவம் தவறிய மழை, வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இப்பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியையே முழுமையாக நம்பியுள்ள நிலையில் அந்த பருவமும் சில நேரங்களில் பொய்த்துவிடுவதும் உண்டு. அந்த நேரங்களில்

சம்பா பயிரில் ஊடுபயிராக விதைக்கப்படும் உளுந்து பயிர், நெல்லில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் வருமானம் கிடைக்கிறது.

மாவட்டத்தில் 88 சதவீதம் நெற்பயிரில் ஊடுபயிராகவும் (சிதம்பரம், காட்டுமன்னார்கோவில்), இரண்டு சதவீதம் பாசன பயிராகவும் (கடலூர், பண் ருட்டி), 10 சதவீதம் மானாவாரியாகவும் (திட்டக்குடி) பயிரிடப்படுகிறது. மொத்தம் ஒரு லட்சத்து 35,000 ஏக்கரில் உளுந்து பயிரிடப்படுகிறது. அதன் மூலம் 27,170 டன் உளுந்து உற்பத்தி கிடைத்து வந்தது. உளுந்து சாகுபடி ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது துவங்கி மார்ச் இறுதியில் அறுவடை செய்யப்படும். காவிரி டெல்டா பாசனத்திற்கு ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படும் காலத்தில் உளுந்து பயிர் செய்யப்படுகிறது.

ஆனால் இந்த ஆண்டு காலதாமதமாக சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்ததால் தாமதமாக நெற்பயிர் சாகுபடி துவங்கியது. அதனால் உளுந்து பயிரை உரிய பருவத்தில் பயிர் செய்ய முடியவில்லை. அத்துடன் அரசு விதை பண்ணைகள் மூலம் வழங்கப்படும் உளுந்து விதை கிடைக்கவில்லை. மேலும் நெல் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல் இயந்திரம் மூலம் அறுவடை செய்ததால் உளுந்து பயிர் அழிந்துவிடும் என்பதால் அதிகமான விவசாயிகள் உளுந்து விதைக்கவில்லை. அத்துடன் ஜனவரி மாத இறுதியில் பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்திவிடுவதால் உளுந்து பயிருக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது.

இதுபோன்ற காரணங்களால் மாவட்டத்தில் உளுந்து பயிர் சாகுபடி செய்வது ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. இந்தாண்டு உரிய காலத்தில் 70,000 ஏக்கரும், தாமதமாக 10,000 ஏக்கர் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. இவையும் பருவம் தவறி பயிரிட்டதால் போதிய விளைச்சலின்றி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். படாத பாடுபட்டு பல்வேறு சிரமங்களுக்கிடையே உளுந்து அறுவடை செய்த சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகள் தவிக்கின்றனர். பண்ருட்டி, விருத்தாசலத்தில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் உள்ளது. பண்ருட்டியில் குறைந்தபட்சம் 4300ல் இருந்து 4700 வரையும், விருத்தாசலத்தில் 4700 முதல் 4900 வரையும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் இல்லாததால் தனியார் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்று நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உளுந்து பயிர் சாகுபடி பற்றி ஆய்வு செய்ய கடந்த வாரம் சிதம்பரம் பகுதிக்கு வந்த வேளாண் உற்பத்தி ஆணையர் நந்தகிஷோர், இயக்குனர் கோசலராமன் ஆகியோரை, உழவர் மன்ற தலைவர் ரவீந்திரன் தலைமையில் விவசாய சங்க பிரதிநிதிகள் சந்தித்து, உளுந்து பயிர் பாதிப்பு குறித்தும், விவசாயிகளுக்கு உளுந்து பயிர் சாகுபடி ஆர்வத்தை பெருக்க பல்வேறு திட்டங்களை கொண்டு வரவேண்டும் என்றும், சிதம்பரத்தில் உழவர் சந்தையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். மேலும் நெற்பயிரில் விவசாயிகளுக்கு போதுமான வருமானம் கிடைக்காத நிலையில், நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் உளுந்து சாகுபடியை பெருக்க ஜனவரி 28க்கு பிறகு உளுந்து பயிருக்கு தனியாக தண்ணீர் திறந்துவிட்டு மாவட்டத்தில் ஏகபோக உளுந்து சாகுபடியை ஊக்குவிக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.